# தொல்காப்பியர் விளக்கும் திருமணப் பொருத்தம்

மூதறிஞர் **தமிழண்ணல்**





**தமிழ்ப்பேராயம்**

**திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்**

SRM UNIVERSITY

(Under section 3 of UGC Act 1956)

# தொல்காப்பியர் விளக்கும்

# திருமணப் பொருத்தம்

மூதறிஞர் **தமிழண்ணல்**

**தமிழ்ப்பேராயம்**

**திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்**

காட்டாங்குளத்தூர் - 603 203

காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.

தொலைபேசி : +91 44 **2741 7375 / 6.**

இணையதளம் : www.srmuniv.ac.in

மின்னஞ்சல் : tamilperayam@srmuniv.ac.in

**நூல் விளக்கம்**

| | | |
|---|---|---|
| பதிப்பு | : | முதற்பதிப்பு, 2012 (தி.பி.2043) |
| பக்கங்கள் | : | **80** |
| நூலாசிரியர் | : | **மூதறிஞர் தமிழண்ணல்** |
| பதிப்புரிமை | : | தமிழ்ப்பேராயம் |
| விலை | : | உரு. **45/-** |
| வெளியீடு | : | **தமிழ்ப்பேராயம்**<br>Thamizh Academy<br>திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்<br>காட்டாங்குளத்தூர் - 603 203<br>காஞ்சிபுரம் மாவட்டம், தமிழ்நாடு.<br>**தொலைபேசி :** +91 44 - **2741 7375 / 6.**<br>**இணையதளம் :** www.srmuniv.ac.in<br>**மின்னஞ்சல் :**tamilperayam@srmuniv.ac.in |
| நூல் அச்சு | : | **ஏசியன் அச்சகம்**<br>சென்னை - 600 014. |
| முகப்பு ஓவியம் | : | **வேதா** |

ISBN : 978-81-924445-2-9

டாக்டர் **தா.இரா. பச்சமுத்து**
புரவலர், தமிழ்ப்பேராயம்.
வேந்தர்
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்
காட்டாங்குளத்தூர் - 603 203.

SRM
UNIVERSITY
(Under section 3 of UGC Act 1956)

---

# வாழ்த்துரை

இந்தியத் துணைக்கண்டத்தில் அமைந்துள்ள சீர்மிகு பல்கலைக்கழகங்களில் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகமும் ஒன்றாகும். வெள்ளிவிழா கண்ட இப் பல்கலைக்கழகம் கல்வித்துறையில் செயற்கரிய செயன்மைகளை நிகழ்த்தியுள்ளது.

நாடெல்லாம் கல்வி நீரோடையை இக் கல்வி நிறுவனம் பாய்ச்சி மாணவர்களின் அறிவுச்செல்வத்தை வளர்த்துவருகிறது. அறிவியல், தொழில் நுட்பம், மருத்துவம் முதலிய துறைகளில் முன்னணியில் நிற்கும் இப் பல்கலைக்கழகம், செந்தமிழின் சிறப்பைப் பாரெங்கும் பரப்பும் நோக்கத்தோடு, தமிழ்ப்பேராயம் என்கிற அமைப்பைத் தோற்றுவித்துள்ளது. தன்னாட்சி கொண்ட இவ்வமைப்பு, தமிழுக்குத் தொண்டு செய்வதைத் தன் தலையாய பணியாகக் கொண்டுள்ளது.

புதிய தலைமுறையினருக்குத் தமிழ்மொழியின் நுட்பங்களை அறிமுகப்படுத்தலும் தமிழ்ப் படைப்பாளர்களை இனங்கண்டு பாராட்டி விருது வழங்கிச் சிறப்புச் செய்தலும் செம்மைத் தமிழ்மொழியின் சிறப்பை வெளிநாட்டார் உணரும் வகையில் மொழிபெயர்ப்புச் செய்தலும் அறிவியல் தமிழை மேம்படுத்துவதும் இப் பேராயத்தின் செயன்மைத் திட்டங்களுள் சிலவாகும்.

தமிழ்ப்பேராயத்தில் அமைந்துள்ள பதிப்புத்துறை, தமிழர் வாழ்வியல் களஞ்சியமாக விளங்கும் தொல்காப்பியம் குறித்து, தமிழறிஞர்கள் பதின்மர் எழுதிய பத்துக் குறுநூல்களை வெளியிட முடிவு செய்துள்ளது. அம் முயல்வின் விளைவே, மூதறிஞர் தமிழண்ணல் எழுதிய ‘தொல்காப்பியர் விளக்கும் திருமணப் பொருத்தம்’ எனும் பெயரில் அமைந்த இந் நூலாகும்.

தமிழ்த் திருமணம் இதுவெனக் காட்டி, பேராசிரியர் தமிழண்ணல் இந் நூலில் வரையறை செய்துள்ளார்.

பேராசிரியர் தமிழண்ணல் நூலறி புலமையும் நுண்ணிய நோக்கும் உடையவர். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். பாரெல்லாம் தமிழ்மணம் பரப்பும் பண்பாட்டுப் பெட்டகம். பேராசிரியர் மூதறிஞர் தமிழண்ணல் எழுதிய இந் நூல் தொல்காப்பியத்தைப் பற்றியும் பண்டைத் தமிழருடைய உயர்வான வாழ்வைப் பற்றியும் இன்றைய தமிழரின் இரங்கத்தக்க நிலையைப் பற்றியும் அறியத் துணைசெய்ய வல்லது.

தமிழ்ப்பேராயத்தின் வெளியீடாக இந் நூல் வெளிவருவது குறித்துப் பெருமையடைகின்றேன். நூலாசிரியர் மூதறிஞர் தமிழண்ணல் அவர்களுக்கும் நூலை வெளியிட்டுள்ள தமிழ்ப்பேராயத்திற்கும் வாழ்த்துக்கள்.

- தா. இரா. பச்சமுத்து

முனைவர் **மு. பொன்னவைக்கோ**
தலைவர், தமிழ்ப்பேராயம்.
துணைவேந்தர்
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்
காட்டாங்குளத்தூர் - 603 203.

SRM UNIVERSITY (Under section 3 of UGC Act 1956)

# அணிந்துரை

**ஓங்கலிடை வந்து உயர்ந்தோர் தொழவிளங்கி**
**ஏங்கொலி நீர்ஞாலத் திருளகற்றும் - ஆங்கவற்றுள்**
**மின்னேர் தனியாழி வெங்கதிரொன் றேனையது**
**தன்னே ரிலாத தமிழ்**

எனும் தண்டியலங்காரப் பாடலில் தமிழ்மொழியின் சிறப்புப் பேசப்படுகிறது. அத் தன்னேரில்லாத தமிழுக்குப் பழைமையையும் பெருமையையும் வளமையையும் சேர்த்த நூல் தொல்காப்பியம் ஆகும்.

வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறும் நல்லுலகத்திற்குப் பெருமை சேர்த்த தொன்மை நூலான தொல்காப்பியம் பண்டைத் தமிழ் மக்களின் வாழ்வியல் களஞ்சியமாக விளங்குகிறது.

தொல்காப்பியர் கி.மு. ஐந்தாம் நூற்றாண்டிற்கு முந்தியவர் என்பது ஆய்வாளர் பலரின் கருத்தாகும். தொன்மைத் தமிழ் நூல்கள் பலவற்றைப் புனலும் கனலும் பகைமையும் அழித்தன. இன்று கிடைத்திருக்கின்ற தமிழ் நூல்களில் மூத்த நூல் தொல்காப்பியம்.

பழைமைக்கும் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்குகின்ற தொல்காப்பியம் தமிழரின் பெருமையை உணர்த்தும் உரைகல்லாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த தொல்காப்பியம் விளக்கும் திருமணப் பொருத்தம் குறித்து, பேராசிரியர் மூதறிஞர் தமிழண்ணல் அவர்கள் நுட்பமாகவும் ஆழமாகவும் அகலமாகவும் இந் நூலில் ஆய்வு செய்துள்ளார்.

பழந்தமிழ்க் குமுகத்தில் கணவன், பொருள்தேடும் பொருட்டு மனைவியைவிட்டுப் பிரிவதும் மனைவி, வீட்டிலிருந்துகொண்டு அவன் தேடித்தந்த பொருளைக் காத்து இல்லற அறம் பிழையாமல் குடும்ப நல்வாழ்வைக் கவனிப்பதும் இருந்தன.

வினையே ஆடவர்க் குயிரே வாணுதல்
மனையுறை மகளிர்க்கு ஆடவர் உயிரே (குறுந்தொகை. 135)

எனும் சங்கப் பாடல் இக் கருத்துக்குச் சான்றாக அமைந்துள்ளது.

குடும்ப நல்வாழ்வை ஓம்பும் இல்லத்தரசியை 'மனையாள்' என்று பழந்தமிழ் நூல் பகருகின்றது. 'மனைக்கு விளக்காகிய வாணுதல்' (புறம். 314) என்ற பழந்தமிழ்ப் பாட்டு, குடும்பப் பொறுப்பைப் பெண்ணே ஏற்று நடத்தினாள் என்பதை உறுதி செய்கிறது. நான்மணிக்கடிகையிலும் பெண்ணை 'மனைக்கு விளக்கு' என உவமித்து இருப்பது குறிப்பிடத்தக்கது. பெண்ணைக் குறிக்கும் 'இல்லாள்', மனையாள் ஆகிய சொற்கள் சங்க இலக்கியத்தில் உள்ளன.

இல்லத்தைப் பெண்கள் கவனிப்பதும் ஆண்கள் வெளியே சென்று பொருள் ஈட்டுவதுமான தொன்மை இலக்கிய மரபு 'சிலப்பதிகாரம்' முதல் பாரதிதாசனின் 'குடும்ப விளக்கு' வரையான நூல்களில் பேசப்படுகின்றது.

ஆனால், கணவன் மனைவி என்னும் இல்லறக் கட்டுக்கோப்பு அமைப்பு அமெரிக்காவிலும் ஐரோப்பிய நாடுகளிலும் தளர்ந்து வருகின்றன என்று பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள், தாம் அமெரிக்காவில் இருந்தபோது நடந்த சில நிகழ்ச்சிகளைச் சான்றாகக் காட்டுகிறார். அமெரிக்க, ஐரோப்பியக் குடும்பப் பண்பாடு சிதைந்தமைக்கு எல்லை மீறிய பொருளாதார வசதி, வரம்பு மீறிய இன்ப வாழ்வு ஆகியவற்றை அவர் காரணங்களாகக் காட்டுகிறார்.

தொல்காப்பியர் ஆண்களுக்குப் 'பெருமையும் உரனும் ஆடூஉ மேன' (களவியல்.7) என்றும் பெண்களுக்கு 'அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த நிச்சமும் பெண்பாற்குரிய என்ப' (களவியல். 8) என்றும் குறிப்பிட்டுள்ளார். காதலன் பெருமையும் அறிவுத் திறனும் நெஞ்சுரமும் உடையவனாகவும் காதலி அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி, நாணம் இளமைப் பண்புகளுக்கேற்ற மடப்பம் முதலியன உடையவளாகவும் விளங்குவர் என்னும் தொல்காப்பியக் கருத்தை அவர் இந் நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் கூறும், காதலரிடம் அமையவேண்டிய பத்துப் பொருத்தங்களைப் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் எளிய நடையில் அனைவருக்கும் விளங்கும்வகையில் விளக்கமாகக் கூறியுள்ளார். தமிழர்

பண்பாட்டின் வெளிப்பாடாக விளங்கும் திருமணப் பொருத்தம் குறித்து அவர் எழுதுகின்றபோது, ஆரியத் திருமணமுறையைக் கடிந்துள்ளார். ஆரியத் திருமணமுறையும் தமிழ்த் திருமணமுறையும் வெவ்வேறானவை என்பதனைச் சான்றுகளுடன் விளக்கியுள்ளார்.

திருமணத்திற்கு முன் ஆணுக்கும் பெண்ணுக்கும் பொருத்தம் பார்க்கும்முறை பழங்காலத்திலிருந்தே இருந்துவந்துள்ளது. பத்துப் பொருத்தங்களைக் கூறிய தொல்காப்பியர் மணமக்களுக்கு ஆகாத 12 தீய இயல்புகளையும் குறிப்பிட்டுள்ளார்.

> **நிம்பிரி கொடுமை வியப்பொடு புறமொழி**
> **வன்சொல் பொச்சாப்பு மடிமையொடு குடிமை**
> **இன்புறல் ஏழைமை மறப்போடு ஒப்புமை**
> **என்றிவை இன்மை என்மனார் புலவர்.** (தொல். 1216)

இந்த ஆகாத பண்புகள் மணமகனையோ, மணமகளையோ தெரிவு செய்யும்முன் விழிப்புடன் கவனிக்க வேண்டுபவை. இந்தப் பன்னிரண்டு தீய குணங்கள் இல்லாத பெண்ணையோ ஆணையோ தெரிவுசெய்து இல்வாழ்க்கையை அமைத்துக்கொள்ளல் நலம். திருமணம் ஆகிவிட்டாலோ இத் தீய குணங்களை அறிவுரை கூறித் திருத்த வேண்டும். இன்றேல் இல்லறம் இனிதே அமையாது என்னும் தொல்காப்பியக் கருத்தைப் பேராசிரியர் தமிழண்ணல் சிறப்பாகத் தெளிவுபடுத்துகிறார்.

தொல்காப்பியர் பத்து ஆகும் பொருத்தங்களையும் பன்னிரண்டு ஆகாப் பொருத்தங்களையும் கூறி, மணவாழ்வு ஒழுங்குற அமையத் துணைசெய்துள்ளார். தொல்காப்பியர் குறிப்பிட்ட பத்துப் பொருத்தங்கள் பிற்காலத்தில் சோதிடர்களால் தவறாகக் கையாளப்பட்டு, அவர்கள் மக்களுக்கு விளங்கியதையும் விளங்காததையும் சொல்லிச் செல்வத்தைச் சுரண்டிவருகின்றனர் என்றும் சோதிடம் மக்களை மூடர்களாகவும் மூடநம்பிக்கை உற்றவர்களாகவும் ஆக்குகிறது என்றும் கூறி, சோதிடர் கூறும் பத்துப் பொருத்தங்களைப் பேராசிரியர் தமிழண்ணல் நிரல்படுத்துகிறார்.

கூரையேறிக் கோழிபிடிக்க முடியாதவர்கள் வானத்தைக் கிழித்து வைகுண்டம் காட்டுவேன் என்று கூறுவதைப் போலச் சோதிடர்கள் தெய்வீகக் கற்பனைகளின் சொந்தக்காரர்கள். குமுக வளர்ச்சிக்குத்

தீமையாய் அமைந்தவர்கள் என்று விளக்கி, சோதிடம் என்பது பொய்களின் கூடாரம், புனைகதைகளின் கூட்டுச் சேர்க்கை; எனவே, அறிவுவாணர்கள் சோதிடத்தைப் புறக்கணிப்பார்கள் என்று திண்மையாக எச்சரிக்கின்றார்.

இல்வாழ்க்கை, செம்மையாய் அமைய மணமக்கள் இருவரும் ஒருவருக்கொருவர் விட்டுக்கொடுக்க வேண்டும். 'ஒத்ததறிவான் உயிர்வாழ்வான்' என்கிறது வள்ளுவம். எனவே, இல்வாழ்வில் ஈடுபட்டவர் விட்டுக்கொடுத்து வாழ்தல் வேண்டும். 'ஒருவர் பொறை இருவர் நட்பு'(பழமொழி நானூறு. 132) எனும் பழந்தமிழ் இலக்கியப் பாட்டுக்கு இணங்க இல்வாழ்க்கை நடத்துதல் வேண்டும்.

மேலும், உலக மக்கள் நலம்பெறவும் பயனுள்ள இல்வாழ்க்கை அமையவும் தொல்லாசான் தொல்காப்பியர் கூறிய திருமண முறைகளை மேற்கொள்ளவேண்டும். அவ்வாறு மேற்கொண்டால் குடும்ப உறவுகள் தழைத்தோங்கும் என்றும் கட்டுக்கோப்பான குடும்பம் உருவாவதற்கு வழிவகுக்கும் என்றும் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் முடிவுரை தந்துள்ளார்.

ஒரு புதினத்தைப் படிப்பதுபோல விறுவிறுப்பான நிகழ்ச்சிகளைக் கோத்து இந் நூலை அவர் சுவையாக எழுதியுள்ளார். நம் காலத்தில் வாழுகின்ற, தொல்காப்பியப் புலமை மிக்க, பேராசிரியர் தமிழண்ணல் எழுதிய இந் நூலைத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் கற்கவேண்டும். கற்றபின் அவ்வாறு நடக்கவேண்டும்.

- மு. பொன்னவைக்கோ

முதுமுனைவர் **ச.சு. இராமர் இளங்கோ**
பதிப்பாளர்
தமிழ்ப்பேராயம்
திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகம்
காட்டாங்குளத்தூர் - 603 203.

---

# பதிப்புரை

ஒண்டமிழ்த்தாய்ச் சிலம்படியின் முன்னேற்றம்
ஒவ்வொன்றும் உன்முன் னேற்றம்.
கண்டறிவாய் எழுந்திருநீ! இளந்தமிழா
கண்விழிப்பாய்! இறந்தொ ழிந்த
பண்டைநலம் புதுப்புலமை பழம்பெருமை
அனைத்தையும்நீ படைப்பாய் இந்நாள்!
தொண்டு செய்வாய் தமிழுக்குத்
துறைதோறும் துறைதோறும் துடித்தெ ழுந்தே!

என்னும் பாவேந்தர் பாரதிதாசனின் எழுச்சிப் பாட்டின் வெளிப்பாடே திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத்தில் உள்ள தமிழ்ப்பேராயம் ஆகும்.

தமிழ்ப்பேராயத்தில் அமைந்துள்ள பதிப்புத்துறை தொன்மைசார் தமிழ் இலக்கியங்கள் குறித்தும் அவ்விலக்கியச் செல்வங்களைப் பிறமொழிகளில் மொழிபெயர்த்து வெளியிடுவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது. முதற்கண் மக்களிடம் தமிழின் மூத்த நூலான 'தொல்காப்பியம்' பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் தொல்காப்பியம் குறித்து ஆய்வறிஞர் பதின்மர் எழுதிய நூல்களை வெளியிட முனைந்துள்ளது.

அவ் வரிசையில் மூதறிஞர் தமிழண்ணல் எழுதிய 'தொல்காப்பியர் விளக்கும் திருமணப் பொருத்தம்' என்னும் இந்த நூல் வெளியிடப்படுகின்றது. பேராசிரியர் மூதறிஞர் தமிழண்ணல் அவர்கள் மதுரைக் காமராசர் பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவராகப் பணியாற்றி நூற்றுக்கணக்கான ஆய்வு மாணவர்களை உருவாக்கிய பெருந்தகை.

பேராசிரியர் பலர் தமிழ் இலக்கிய வரலாறு எழுதியுள்ளனர். ஆயின் பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் 'புதிய நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு' எனும் நூலை எழுதித் தமிழ் இலக்கிய வரலாற்றிற்குப் புதிய தடம் வகுத்துத் தந்துள்ளார். 'வாழ்தல் வேண்டிப் பொய் கூறேன் மெய் கூறுவல்' (புறநானூறு. 139) என்று மொழிந்த சங்ககாலச் சான்றோரின் வழித்தோன்றல். பழந்தமிழ் நூல்களையும் தற்கால நூல்களையும் கற்றுணர்ந்த பேராசிரியர் தமிழண்ணல் பழைமைக்கும் புதுமைக்கும் பாலமாக அமைந்தவர்.

கவிஞர், ஆய்வாளர், உரையாசிரியர், பேராசிரியர் எனப் பலவகை நிலைகளில் சிறப்புப் பெற்றவர். பாவேந்தர் பாரதிதாசன் படைத்த தமிழியக்கத்தின் குறியீடு. அஞ்சாமையின் தோற்றம். எவர் எதைச் சொன்னாலும் 'ஆமாம் ஆமாம்' என்று தலையாட்டுகின்ற இச் சமூக அமைப்பில் காற்று அடிக்கின்ற பக்கமெல்லாம் 'சாய்ந்து' 'சாய்ந்து' வாழும் நாணலைப் போன்று அல்லாமல் உண்மையைக் கண்டு உரைக்கும் உரவோர்.

பேராசிரியர் தமிழண்ணல் விண்ணைமுட்டும் ஆலமரத்திற்கு நிகரானவர். வேரும், அடிமரமும், கிளைகளும், இலைகளும், காய்களும் கனிகளும் உள்ள ஆலமரம் விழுதுகளைப் பரப்பிக் கடுமையான காற்றுக்கும் அஞ்சாமல் நிமிர்ந்து நிற்கின்றது. அவ்வாறே பேராசிரியர் தமிழண்ணல் அவர்களும் தமிழ்ப் பகைக்கு அஞ்சாமல் நிமிர்ந்து நிற்பவர். தமிழ்த்திறமிக்க இருபதாம் நூற்றாண்டின் நாவீறு படைத்த நக்கீரரான பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் தமிழர் திருமண வரலாற்றைச் சுவையோடும் சான்றுகளோடும் படைத்துள்ளார். அத்தகைய சிறப்பு வாய்ந்த இந்த நூலை வெளியிடுவதில் தமிழ்ப்பேராயப் பதிப்புத்துறை மகிழ்ச்சியடைகிறது.

**- ச.சு. இராமர் இளங்கோ**

# பொருளடக்கம்


| | |
|---|---|
| முன்னுரை | 13 |
| நல்ல குடும்பம் | 15 |
| தொல்காப்பியர் விளக்கும் பத்துப் பொருத்தங்கள் | 27 |
| மணமகன், மணமகளிடையே அமையக்கூடாத பொருந்தாக் குணங்கள் | 37 |
| கணியம்(சாதகம்) பார்க்கும் பழக்கம் | 47 |
| மனப்பொருத்தமும் கட்டுப்பாடும் | 57 |
| சங்ககாலத் தமிழகம் | 59 |

# முன்னுரை

பேராசிரியர் **மு. பொன்னவைக்கோ** அவர்கள், திருச்சி பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில், துணைவேந்தராக இருந்தபொழுது, தமிழைப் பாடமொழி ஆக்குவதிலும் தமிழ் வளர்ச்சிப் பணிகளிலும் துணிச்சலுடன் ஈடுபட்டார்கள். பலர் தமிழுக்கு உண்மையான ஆக்கம் தேடுவதை விரும்புவதில்லை. உயர் கல்வியில் அறிவியலில், பொறியியலில் தமிழுக்கு இடம் எதற்கு என்பதே அவர்களின் வாதம். ஆனால், தமிழனாகப் பிறந்தவன் 'தமிழ்' என்ற மிக அரிய செல்வத்தை, ஞால முதன்மொழியை, ஈராயிரம் ஆண்டுகளுக்கு மேற்பட்ட இலக்கிய வளத்தைப் பெற்றவனாவான். தங்கட்குக் கிடைத்த இவ்வரிய செல்வத்தை அவன் எத்துறை சார்ந்தவனாயினும் அறிந்து, போற்றிக் கற்று முழுமைத் தமிழனாதல் வேண்டும் என்பது அவரது நெஞ்சத் துணிபு. இதனால் கவியரசர் கண்ணதாசன் பாடியதுபோல், 'போற்றுபவர் போற்றட்டும், புழுதிவாரித் தூற்றுபவர் தூற்றட்டும், ஏற்றதொரு பணி என்றால் துணிச்சலுடன் தொடர்ந்து செல்வேன்' என்பது அவர் எடுத்த முடிபாகும்.

ஒருமுறை பன்னிரண்டு பல்கலைக்கழக உயராய்வு மையத் தலைவர்களை அழைத்து, ஒரு கருத்தரங்கை நடத்தினார். அவ்வப் பல்கலைக்கழகங்களில் நடைபெறும் தமிழ் ஆராய்ச்சி வளர்ச்சிப் பணிகளைக் கட்டுரையாக எழுதிவரச் செய்தார். இதன்மூலம் இத் துறைகளிடையே ஒருங்கிணைப்பு ஏற்படவும் ஒருவர் செய்வதையே மற்றவர் செய்யாமல் தவிர்க்கவும், அவரவர் புதுமையாய் வெவ்வேறு பணிகளை எவ்வாறு செய்யலாம் எனத் திட்டமிடவும் இயலும் என எண்ணினார். இக் கருத்தரங்கைச் சில மாதங்களுக்கு ஒருமுறை கூட்டலாம் எனக் கூறி, இதை ஒரு அமைப்பாக்கலாமே என்றார். அவ்வாறெனில் அவ்வமைப்புக்கு என்ன பெயர் வைக்கலாம் என வினவினார். யான் 'தமிழ்ப்பேராயம்' என வைக்கலாம் என்றேன். அறிஞர்கள் என் கருத்தை ஏற்றது எனக்கு மகிழ்ச்சி தந்தது.

துணைவேந்தர் மு. பொன்னவைக்கோ அவர்கள் திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக்கழகத்திற்கு வந்ததும், நினைவாக 'தமிழ்ப்பேராயத்தைத்' தொடங்கியது தமிழ் மக்கள் செய்த தவப்பயனாகும். சில சமயங்களில் 'தாங்குவார் இன்றித் தவிக்குந் தமிழ்' என எழுதத் தோன்றும். உலகளாவிய பெரும்புகழ் படைத்த பல்கலைக்கழகத்தில்

'தமிழ்ப்பேராயம்' தொடங்க, அதன் நிறுவனர் பாரி வேந்தர் அவர்கள் ஒப்புதல் அளித்ததுடன், அதனை நிறுவி, வளர்க்க ஆவன அனைத்தும் செய்வதாக உறுதி பகர்ந்தார். அவரது வள்ளன்மையும் துணைவேந்தரின் பன்முகத் திறமையும் இத் தமிழ்ப்பேராயத்தையும் உலகளாவிய புகழ்படைத்ததாக ஆக்கும் என்பது உறுதி.

திரு. இராமசாமி நினைவுப் பல்கலைக் கழகத்தில், தமிழ்ப்பேராயம் தொடங்கியபொழுது அதன் தலைவராகிய பொன்னவைக்கோ தலைமையில் தமிழறிஞர் கூட்டம் நடந்தது. பல திட்டங்கள், விருது வழங்குதல் போன்றவை சிந்திக்கப்பட்டன. தொல்காப்பியத்தை அனைவருக்கும் அறிமுகப்படுத்தலாமே, அதற்கு அதன் உட்பொருளைச் சிறுசிறு நூல்களாக எழுதி வெளியிடலாமே என்றவர், உடனடியாகத் தலைப்புகள் கேட்டார். தொல்காப்பியர் விளக்கும் திருமணப் பொருத்தம், மகளிர் ஆளுமை, ஆடவர் ஆளுமை, மானுட விழுமியங்கள் எனச் சிலவற்றை யான் கூற, பிறரும் நல்ல பல தலைப்புகள் கூறினர். அவற்றுள் பத்துத் தலைப்புகள் தேர்வு செய்யப்பட்டு, பத்து அறிஞர்களிடம் சிற்றேடுகளாக எழுதித் தருமாறு ஒப்படைக்கப்பட்டன.

அவற்றுள் 'திருமணப் பொருத்தம்' தலைப்பை யான் எடுத்துக்கொண்டேன். கணியர்களும் பத்துப் பொருத்தம் பார்க்கிறார்கள்; ஆகாக் குணங்கள் (தோசங்கள்) பற்றி விளக்குகிறார்கள்; தொல்காப்பியரும் பத்துப் பொருத்தம் பற்றிக் கூறுகிறார்; பன்னிரண்டு ஆகாக் குணங்கள் பற்றியும் குறிப்பிடுகிறார். இது எனக்கு வியப்பைத் தந்தது. இந் நூலில் இவை பற்றி இயன்றவரை விளக்கியுள்ளேன். சங்க காலக் காதல் வாழ்வில் காணப்படும் நிறைகுறைகளை விவரித்துள்ளேன். இன்றைய மன்னாய இளைஞர் இருபாலார்க்கும் இவை பாடமாகக் கற்பிக்கத்தக்கன; நெறி பிறழாத நல்வாழ்வுக்கு வழிகாட்டுவனவாகும்.

இப் பணியை எனக்குத் தந்த பல்கலைக்கழகத்திற்கும் அதன் வேந்தருக்கும் தமிழறிஞர் பெருமகன், பாவாணர் நெறி போற்றும் பண்பாளர், தமிழ்ப்பேராயத் தலைவர், துணைவேந்தர் மு. பொன்னவைக்கோ அவர்களுக்கும் நன்றி கூறக் கடப்பாடுடையேன். தமிழ்ப்பேராயத்தின் பதிப்புப்பணிப் பொறுப்பாளராக விளங்கும் முனைவர் ச.சு. இளங்கோ துடிப்புமிக்க சிறந்த பதிப்பாளராவார். அவர் கைபட்டு வெளிவரும் புத்தகங்கள் ஒளிவீசித் திகழும். அவருக்கு என் வாழ்த்துக்கள்.

- தமிழண்ணல்

# நல்ல குடும்பம்

ஐ. நா. பேரவை சார்ந்த, ஒரு கருத்தரங்கில் உலக நாடுகளிலுள்ள பல்வேறு குடும்ப அமைப்புக்கள் பற்றி ஒருமுறை விவாதம் நடந்தது. பிற நாட்டு நல்லறிஞர் பலரும் இந்திய நாட்டுக் குடும்பக் கட்டமைப்பைப் பாராட்டிப் பேசினர். இந்திய ஆய்வாளர்களோ இங்குள்ள வரதட்சிணை, ஆண்டான் அடிமை போலும் வேறுபாடு, பெண் குழந்தைப் பேற்றை வெறுக்கும் மனப்பான்மை ஆகியவற்றை விதந்து பேசினர். எனினும் இறுதியில் சிறந்த குடும்பக் கட்டமைப்பு (The Best Family System) என்பது இந்தியக் குடும்ப அமைப்பே எனத் தீர்மானித்தனர். இந்து போலும் ஆங்கில நாளிதழ்களில் இச் செய்தி வெளிவந்தது.

தமிழகத்தைப் பொறுத்தவரை ஆடவன் குடும்பத்திற்கு வேண்டிய செல்வத்தைத் தேடி வருபவனாகவும் குடும்பத் தலைவி அச் செல்வத்தைப் பேணிக் காத்து, அனைத்துக் கடமைகளையும் பொறுப்புடன் செய்பவளாகவுமே குடும்ப வாழ்வுமுறை உளது. இன்றும் அம் முறை நீங்கிவிடவில்லை. மேலை நாட்டுத் தாக்கத்தாலும் கல்விமுறை முன்னேற்றத்தாலும் இருவரும் வேலைக்குப் போனாலும், இம் முறையில் பெரும் மாற்றம் ஏற்பட்டுவிடவில்லை. இதுபற்றி ஆராய்வது நம் நோக்கமன்று.

குடும்பம் என்று வந்தால் பெண்ணுக்குத் தலைமையும் அஃதல்லாதவற்றில் ஆணுக்குத் தலைமையும் தரும் ஒரு சமனிலைப்பாடு இதில் உளது. மானுட வாழ்க்கையை அகம் புறம் எனப் பகுத்து, இலக்கியம் படைத்ததிலும் இந் நெறிமுறையே அடங்கியிருக்கிறது. மேலும் மனைவி, இல்லாள் என்ற சொற்கள் அவளது உரிமையையே பறை சாற்றுகின்றன. அவற்றுக்கு எதிராக ஆண்களை 'இல்லான்' 'மனைவன்'

என்பதில்லை. இது காப்பியம், புராணம், கவிதை அனைத்திலும் ஊடுருவியுளது.

கோவலன் தங்களிடமிருந்த பொருட்செல்வத்தைத் தான் வீணாக்கியதற்கு வருந்தி, சிலம்பு முதலாக வான்பொருள் ஈட்டவே விழைகின்றான். கண்ணகி குடும்பப் பொறுப்புக்களை ஏற்று, அறவோர்க்கு அளித்தல், அந்தணர் ஓம்புதல், துறவோரைப் பேணுதல், விருந்து எதிர்கோடல் முதலியவற்றை இழந்ததற்கே வருந்துகிறாள்.

சங்க இலக்கியப் பாலைத் திணைப் பாடல்கள் தலைவன் பொருள்தேடப் பிரிதலைப் பற்றியே பேசுகின்றன. மனைவி வீட்டிலிருந்து, இல்லறக் கடமைகளை ஆற்றுபவளாகவே படைக்கப்படுகிறாள். இதனைத் தெளிவுற உணர்ந்தால், உழவுத் தொழில், பிற தொழில்கள் என்றால் பெண் அதில் பங்குகொள்வதில்லை என்பது கருத்தன்று. அவள் பொருள் தேடவேண்டிய சூழல்களில் ஈடுபடுவதில்லை என்பதும் கருத்தன்று.

பொதுவாக ஒரு குடும்பம் என்பது, முதலில் இருவர் கொண்டது. இவர்களில் ஒருவர் செல்வம் தேடுபவராகவும், மற்றவர் அதனைக் கொண்டு குடும்பம் நடத்துபவராகவும் கொண்டனர். இதனால் பெண் நாட்டை ஆள்வது முதல், பட்டங்கள் பெற்றுச் சட்டங்கள் இயற்றுவதுவரை பங்கு கொள்ளக்கூடாது என்பதில்லை.

காலம் மாறி வருகிறது என்பது உண்மையே; அதற்கு ஏற்ப நாம் மாறாமல் தப்பவும் முடியாது. முன்பு இருந்த கூட்டுக் குடும்ப நிலை இன்று மாறிவிட்டது. குடும்பங்கள் தனித்தனி எனச் சிதறிவிட்டன மட்டுமன்றி, கணவனும் மனைவியும் வெவ்வேறு ஊர்களில் வேலை பார்க்கும் 'உதிரி'களான நிலையும் உருவாகியுள்ளது.

இருவரில் ஒருவர் வேலைபார்க்க, மற்றொருவர் குடும்பத்தைத் தாங்குவது நல்லதா?

இருவருமே வேலை பார்ப்பதுதான் நல்லதா?

அல்லது

குடும்பம் என்ற கட்டமைப்புத் தேவைதானா?

இத்தகைய முரண்பட்ட சிந்தனைகள் மோதிவரும் காலமிது. எனினும் ஆசியப் பண்பாடு - இந்தியப் பண்பாடு - தமிழ்ப் பண்பாடு என்பது ஒன்று.

அமெரிக்க - ஐரோப்பியப் பண்பாடு என்பது வேறுபட்ட ஒன்று.

**பண்பாட்டில் முரண்பாடு**

இன்று ஆசியக் கண்டத்திலும் ஐரோப்பியப் பண்பாடு விரைந்து பரவி வருகிறது. தமிழ்ப் பண்பாடு போல்வன நிலைகுலைந்து சீர்கெட்டு வருகின்றன.

எது நல்லது என்று தீர்மானிக்க முடியாத சூழல் இன்றுளது.

அமெரிக்க ஐரோப்பியப் பண்பாடு எல்லைமீறிய பொருளாதார வசதி, வரம்பு மீறிய இன்ப வாழ்வு எனும் இவற்றை நோக்கியது.

நம் பண்பாடு 'புலி பசித்தாலும் புல்லைத் தின்னாது' என்பதற்கு ஒப்ப, மானுட நன்மதிப்புக்களைப்(Human Values) பேணுவது. வரம்புக்கு - வழிவழி வரும் கட்டுப்பாட்டிற்கு உட்பட்டது.

ஆயிரத்துத் தொள்ளாயிரத்துத் தொண்ணூறுகளில், அமெரிக்காவில் கண்ட, சில அருவருப்பான செய்திகளில் சிலவற்றை இங்கே குறிக்க விரும்புகின்றேன்.

செய்தித்தாளில் ஒரு விளம்பரம்:

'எனக்கு வயது 74. அறுபது வயதை ஒட்டி ஒரு பெண்மணி துணைக்குத் தேவை' (இவர் பலமுறை மணமுறிவு பெற்றவர். கடைசிக் காலத்தில் துணையின்றி வாடுகிறார்).

ஒரு பெண்மணி அந்நாட்டில் இறந்து போனார். அவருக்கு முதற் கணவர் வழி பிறந்த பிள்ளைகள் தங்கள் தாயை, தங்கள்

தந்தையை அடக்கம் செய்த இடத்தின் பக்கத்திலேயே அடக்கம் செய்ய வேண்டும் என்று வாதாடினர்.

இரண்டாம் கணவர் வழிப் பிறந்த பிள்ளைகளோ தங்கள் தந்தையுடன்தான் நீண்ட காலம் வாழ்ந்தார். எனவே அவர் புதைக்கப்பட்டுள்ள இடத்தருகிலேயே, தாயும் புதைக்கப்பட வேண்டும் என வாதாடினர்.

மூன்றாம் கணவரது பிள்ளைகளோ, தங்கள் தாய் இறுதியில் வாழ்ந்தது, தங்கள் தந்தையுடன்தான். எனவே அவரது உடலருகேதான் புதைக்கவேண்டும் என எதிர்வழக்காடினர்.

பிணம் வீட்டில்; வழக்கு நீதிமன்றத்தில். வழக்கு முடியுமுன் நான் இந்தியா வரநேர்ந்தது.

வேறு ஒரு செய்திதான் மிகுந்த அதிர்ச்சி தந்தது. அவள் அவனைக் காதலித்து மணந்துகொண்டாள். சில ஆண்டுகள் அன்பைப் பொழிந்து உடன் வாழ்ந்தாள். அவன் ஆயுள் காப்பீடு முதல் அனைத்திலும் அவளையே வாரிசுரிமை எனப் பதிவு செய்திருந்தான்.

ஒருநாள் விடுதியில் உணவுண்டு திரும்பினர். அவன் தன் மகிழுந்து அருகில் சென்று கதவைத் திறந்தான். திடீரென்று சிலர் அவனைத் தாக்கிக் கொல்ல முயன்றனர். எப்படியோ தப்பிவிட்டான். வழக்கு நீதிமன்றம் வந்தபோது உண்மை வெளியானது. அக் கொலைக் குழுவினரைக் கணவனைக் கொல்லத் தூண்டியவள் அக் காதல் மனைவிதான்.

அவன் இறந்தால் அவன் எழுதிவைத்த அனைத்துப் பணமும் அவளுக்குக் கிடைக்கும். அதையெல்லாம் பெற்றுக் கொண்டு, கவலையற்ற பறவையாக வாழ, அவள் திட்டமிட்டிருந்தது தெரியவந்தது.

கொலை முயற்சி நடந்த அந்தக் கணம்வரை அவள் பொழிந்த அன்பை நீதிமன்றத்தில் கூறி, தன் வியப்பை வெளிப்படுத்தினான் அவன்.

அந்த அளவு மரத்துப் போய் - இன்ப வாழ்வு தேடும் விலங்கினங்களாக மேலை நாடுகள் மாறிவருகின்றன. இதனால்

அங்குத் திருமணம் செய்துகொள்ள அஞ்சுகிறார்கள். உதிரிகளாக வாழ்கிறார்கள். ஓரினப் புணர்ச்சிகள் பெருகி வருகின்றன. ‘குடும்ப வாழ்வு’ என்பது அங்குப் பெரிதும் சீர்குலைந்து வருகிறது.

நம் நாட்டில் கல்வி என்பது பண்பாட்டை வளர்ப்பதாக இருந்தது. இன்று பணம் தரும் கருவியாக முற்றிலும் மாறிவிட்டது. கணினிவழித் தொழில் பல்கிவிட்டது. ஆணும் பெண்ணும் வேலைக்குப் போவதென்ற மரபு வேரூன்றிவிட்டது. மேலைநாட்டைப் போலக் குழந்தையை, ‘வளர்ப்பு நிலையங்களில்’ விட்டுவிடுகின்றனர்.

கணவன் வேறு எங்கோ, எந்த ஊரிலோ முன்பின் தெரியாத மகளிர் சூழ, வேலை பார்க்கிறான். அவளும் அவ்வாறே. காம உணர்வு பஞ்சும் நெருப்பும் போன்றது. இதனால் மணமுறிவுகள், ஒருவருக்கே பலமுறை திருமணங்கள், சீரழிவுகள், வழக்குகள் பெருகிவருகின்றன.

பழைமைக்கும் புதுமைக்குமிடையே ஒரு மனக் குழப்பம் - போராட்டம் ஏற்பட்டு, மக்கள் எந்தத் திசையில் திரும்புவதெனத் தெரியாமல் திகைக்கின்றனர்.

## காதலர் புனைவில் பழைமையும் புதுமையும்

ஆணும் பெண்ணும் திருமண வயதை ஒட்டி வரும்போது, முன்பு கண்ணிமைபோல் காத்தனர். இன்றோ பிள்ளைகள் வேலைபார்க்குமிடம் வேறு; பெற்றோர் இருக்குமிடம் வேறு. அதனால் கட்டுப்பாடு எதுவும் இல்லை.

ஒரு கன்னிப்பெண் தனக்குரிய காதலனை - கணவனைத் தேடிக் கொள்கிறாள். இளைஞனோ தவறாகப் பல மகளிரொடு பழகி, தனக்கென ஒருத்தியைத் தேர்ந்தெடுக்க முயல்கிறான்.

இதில் பத்தில் ஒன்றுதான் நல்லதாக - வெற்றியாக அமைகிறது. இளமைக் காம உணர்வு, பெரிதும் உடம்பின் வழிப்பட்டது. நல்லது கெட்டது என வேறுபாடறிய உள்ளத்திற்கு இடம் கொடுப்பதில்லை. இதனால் காம உணர்வு, அந்த நேரத்திற்குப் பசியைத் தீர்த்துக் கொள்வதுபோல் ஆகிவிட்டது. இதனால் இடர்ப்படுபவள் பெண்ணே.

இச் சூழல்கள் ஒருபுறம் வளர்ந்தாலும், பெற்றோர் தம் மக்களைக் கண்காணித்து, உரிய முறையில் திருமணம் செய்வித்துக் கண்குளிரப் பார்த்து, மகிழ்ச்சியடைவது இன்னமும் பெரும்பான்மையாக நீடிக்கிறது என்றே கூறலாம். இன்று இதற்கும் இடர்ப்பாடு வந்துவிட்டது. தக்க - நல்ல - நம்பிக்கையுள்ள மணமகனை, மணமகளைத் தேர்ந்தெடுப்பது என்பது மிகவும் கடினமாகிவிட்டது.

சங்க காலத்தில் நிலவுலகில் வாழ்ந்தவர்களில் உயர்ந்தோர், தாழ்ந்தோர், செல்வர், வறியவர் எனப் பல வகையினர் இருந்திருப்பர். பல தொழிலினர், வணிகர், அடித்தொழில் செய்வோர் என்று, இன்றுபோல் அன்றும் வாழ்ந்திருப்பர் என்பதில் ஐயமில்லை. இலக்கியம் படைப்பவர்கள் இவர்கள் அனைவரையும் மனங்கொண்டுதான் படைத்திருப்பர்.

சங்க அகத்திணைப் பாடல்களில் இத்தகைய பல வகையினரையும், பாடலுள் வரும் 'கருப்பொருள்களாக'க் காண்கிறோம். தொல்காப்பியர் கருப்பொருள் பற்றிய நூற்பாவில் 'செய்தி' என்று கூறுகிறார்.

**தெய்வம் உணாவே மாமரம் புள்பறை**
**செய்தி யாழின் பகுதியொடு தொகைஇ**
**அவ்வகை பிறவும் கருஎன மொழிப.** (தொல். 964)

இதற்கு அக்காலப் பொருள் செய்தி - செயல் - தொழில். தொழிலால் வேறுபடும் மக்கள் என்று கூடக் கூறாது, தொழில்வகை என்று மட்டும் கூறியதேன்?

அகத்திணையில் வரும் கருப்பொருளாம் மக்களை, இங்ஙனம் மிக நுட்பமாகவும் குறிப்பாகவும் கூறுகிறார். பிறப்பால் சமமான மக்கள், தத்தம் தொழிலால் வேறுபாடு அறியப்படுகின்றனர் என்ற கருத்துச் சிந்திக்கத்தக்கது.

தாம் வாழும் நிலத்தாலும் தொழிலாலும் பெயர் வேறுபடும் இவர்களை வைத்து, இன்றைய சிறுகதை, புதினம் போலப் படைத்தன அல்ல, அகத்திணைப் பாடல்கள். அவற்றில் தலைவன், தலைவி, தோழி, தாய், பிறர் என, உலகப் பொதுவான - பெயர் சுட்டப்படாத தலைமக்களே இடம்பெறுகின்றனர்.

பாட்டுத் தலைவன், தலைவி போல்வார் மிக உயர்ந்த குடிமக்களாகவே காணப்படுகின்றனர். அன்றைய மன்பதையில் இவர்கள் உயர்ந்த குடிமக்கள், செல்வர்கள், நற்பண்பு அனைத்தும் நிரம்பியவர்கள். மேலும் மேல் - கீழ் என அறிய இயலாது. பொதுவாக, உலகிடை வாழும் மக்கள் எனப் பொருள் கொள்ளுமாறே, பெரும்பான்மையான பாடல்கள் உள.

சாதாரண அடித்தட்டு மக்களைப் புனைந்த பாடல்கள், அன்று நிரம்ப இருந்திருக்கும். வாய்மொழி இலக்கியமான அவை இலக்கியமாக்கப் படவில்லை. சங்க இலக்கியம், தேர்ந்தெடுத்த பாடல்களின் தொகுப்புக்களாதலால், அவற்றில் பெரிதும் மேல்தட்டு மக்களே, தலைமக்களாகப் புனையப் பட்டிருப்பதைக் காண்கின்றோம். கலித்தொகையில் அடித்தட்டு மக்களின் காதற் பாடல்கள் எவ்வாறிருந்திருக்கும் என அறிய, சில பாடல்கள் உள.

பிற்காலக் காப்பியங்களில், தன்னிகரில்லாத் தலைவர்களையே, காப்பியங்களில் புனைதல் வேண்டும் எனக் குறித்துள்ளனர். சங்க அகப் பாடல் தலைவர்கள் அத் தகையவரேயாயினும், அவர்களின் நிறை குறைகளும் நன்கு வெளிப்படப் புனையப் பட்டுள்ளன. அதாவது நிறைகளைப் போற்றியும், குறைகளைக் கடிந்து களையுமாறும் வரும். அதற்கேற்ற சூழல்களுடன் அவை கற்பிக்கப்பட்டுள்ள திறம் நுட்பமாய் அறியத் தக்கதாகும்.

இன்று சமுதாயக் குறைகளையும் தீமைகளையும் வெளிப்படப் புனைய வேண்டும் என்று வாதிடுகின்றனர். பாலியல் கேடுகள் முதல் ஒழுக்கச் சீரழிவுகள் வரை அனைத்தையும் பச்சையாக அப்படி யப்படியே எழுதியும், படமாக எடுத்துக் காட்டியும் வருகின்றனர்.

சங்க இலக்கியம் போல்வன குறிக்கோட் தன்மையுடையன; அவை குறைகளை மறைத்து விடுகின்றன என்பர்.

சங்க காலப் புலவர்கள் காலத்திலும் சமுதாயம் சீரழிவுகளுடன் கூடியதாகவே இருந்தது. ஆனால், 'நல்லோரைப் படைத்து, உயர்ந்தோரை வரைந்து எழுதினால் - பாடினால் சமுதாயம் உயர்வை நோக்கி வளரும்' எனக் கருதினர்.

தீமைகளுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டுதல் தீதென்று கருதினர்.

மனித மனம், சார்ந்ததன் வண்ணமாகும் இயல்புடையது. தீமையை வெளிச்சம் போட்டுக் காட்டினால், மக்களிடையே தீயசக்திகளும் எண்ணங்களும் செயல்களுமே மிகும். நல்லோர்க்கு உரியனவாகிய நற்பண்புகளை, மேன்மைப்படுத்தி ஒளிருமாறு மக்களுக்கு உணர்த்தினால், தீமைகள் மறக்கப்படும்; நன்மைகள் வளர்க்கப்படும் என நம்பினர்.

இன்றைய நிலையில் இவை நீண்ட - முடிவற்ற விவாதத்திற்குரியவையே.

சங்க கால வாழ்வியல் கோட்பாடு இது என அறிவோம். அவை பற்றிய நன்மை தீமைகளை இங்கு ஆராய்வது நம் கருத்தன்று.

**'உயர்ந்தோர் கிளவி வழக்கொடு புணர்தலின்'** என்பது, 'தொல்காப்பியப் பொருளியல்' நூற்பா. (எண். 213)

'உயர்ந்த அறிஞர்களும் படைப்பாளிகளும் படைக்கும் நூல்கள் எல்லாம் இவ் வுலக வழக்கைத் தழுவியன' என்பது கருத்து.

அவ்வாறாயின் உலக வழக்கு என்பது எது?

"உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவன வெல்லாம் செய்யுட்கு(இலக்கியத்திற்குப்) பொருளாகப் புணர்க்க என எஞ்சியது உணர்த்தியவாறுமாம். உயர்ந்தோர் வழக்கென் றமையானும், பொருளும் இன்பமும் கெடாமல் மூன்றனுள் ஒன்று பயப்பக் கூறுதல் கொள்க" என்பது இளம்பூரணர் தரும் விளக்கம்.

உயர்ந்த மக்கள் வாழ்வாக இருக்கவேண்டும்.

அறம் பொருள் இன்பம் மூன்றில் ஒன்றான உயர்ந்த பயனைத் தரவேண்டும்.

இந்நோக்குடன் இலக்கியம் படைக்கவேண்டும் என்பது கருத்து.

நச்சினார்க்கினியர், 'வழக்கெனப்படுவது' என்னும் மரபியற் சூத்திரத்தான் 'வழக்கு' உயர்ந்தோர் கண்ணதாயிற்று என எழுதுகின்றார்.

அகத்திணைக் காதற் பாடல் நாட்டுப்புற மக்களின் பாடல்களிலிருந்து கிளைத்ததுதான். புலவர்கள் அதனை முடிந்தவரை மேன்மைப் படுத்தினர்.

தொல்காப்பியர் ஓர் அகத்திணைப் பாடலில் வரும் காதலன் எத்தகையவனாக இருக்கவேண்டும்; காதலி எத்தகையவளாக இருக்கவேண்டும் என்பதை நூல் முழுதும் உணர்த்துகின்றார்.

அத்தகைய மேன்மக்களைக் காட்டிக் காட்டியே, இம் மானுடத்தை உயர்த்த வேண்டும் என்பது அவர்கள் கருத்தாக இருந்தது.

சமுதாயம் உயர்வை நோக்கியதாக இருக்கவேண்டும்; உன்னதத்தை நோக்கியதாக இருக்கவேண்டும் என்ற கருத்தால், இப் படைப்புநெறி போற்றப் பட்டது.

பெருமையும் உரனும் ஆடூஉ மேன (தொல், 1044)

அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த
நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப (தொல். 1045.)

என்பன களவியல் சூத்திரங்கள்,

காதலனாக வருபவன் பெருமையும் அறிவுத் திறனும் நெஞ்சுரமும் உடையவனாகவும்

காதலி அஞ்சவேண்டியதற்கு அஞ்சி, நாணம், இளமைப்பண்புக் கேற்ற மடப்பம் முதலியன உடையவளாகவும் இடம்பெறுவர்.

களவியல் என்றதும் இன்றையத் திரைப்படக் காதலர்கள் நினைவுக்கு வருவர். தவறான வழியில் பணம் குவிக்க நினைக்கும் படத் தயாரிப்பாளர்கள், காதலை மிகவும் கொச்சைப் படுத்திவிட்டனர். சுருங்கச் சொன்னால், ஐப்பசி மாதத்துத் தெருநாய்கள்போலக் காதலரை ஆடிப்பாட விடுகின்றனர்.

தொல்லாசான், 'களவியல்' என்றதும், களவுக் காதலர் எப்படி இருப்பரோ என எண்ணுபவர்களுக்கு, ஐயம் தீர்க்கும் இடம் இது. 'களவு' என்பதற்காக, இக் காதலர்கள் தலைமைப் பண்பை இழந்தவர்கள் ஆகார் என்பதை அறிவுறுத்தவே இந் நூற்பாக்களை யாத்துள்ளார்.

**மெய்ப்பாட்டியல்**

களவு, கற்பு என்று காதலைப் பற்றி மட்டும் அகத்திணை விளக்கவில்லை.

காதலர் பண்புநலன்,

காதலரின் உள்ளத்துணர்வுகள்,

காதல்வாழ்வில் ஏற்படும் சிக்கல்கள், தீர்வுகள் எனப் பலவற்றையும் கூறுவதுடன், இவற்றை இலக்கியமாகப் படைக்கும் கலைநுட்பங்களையும் அகத்திணை பேசுகிறது.

சுவை மிகுந்த இன்ப வாழ்வுதானே காதல். இதில் தலைவியின் மெய்ப்பாடுகளைக் கூடுதலாக விளக்கியிருப்பது, இவை உளவியல் சார்ந்தவை என்பதை மெய்ப்பிக்கின்றது.

பொதுவான சுவைகளை விளக்கிவிட்டு, காதலரிடம் மட்டும் தோன்றும் மெய்ப்பாடுகளைக் கூறுகிறார்.

இயற்கைப் புணர்ச்சி என்பது முதன்முதல் கூடும் கூட்டம். இதில் புணர்ச்சிக்கு முன்னிகழ்வன, பிறகு நிகழ்வன என இருவகைப்படுத்துகிறார்.

வரைவுக்கு நிமித்தமான மெய்ப்பாடுகள், பிரிவுக் கால மெய்ப்பாடுகள் என்று அகத்திணை சார்ந்தனவற்றை விரிவாக விளக்குகிறார். இம் மெய்ப்பாடுகள் அனைத்தும் அனைவரிடமும் ஒன்றுபோல் நிகழ்வன அல்ல.

பெருந்திணை என்பதற்கு ஒப்பவும் இராக்கதம், பைசாசம் என்றெல்லாம் வரும் வடமொழி மணவகைகளுக்கு ஒப்பவும் உலகிடை வாழ்வோர் பலராவர்.

இவர்கள் விலங்கினங்களுக்கு அடுத்த நிலையினர்.

தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் முடிவில் தாம் கூறிய இவை அனைத்தும், சமுதாயத்தில் உயர்ந்த மாந்தரிடம் காணப்படுவன என்பதை நினைவூட்ட எண்ணுகிறார். விலங்கின வளர்ச்சி காணப்படுதலின், மாந்தரில் பலர் அவைபோல் வரம்புமீறி நடப்பர். அவர்களிடம் இம் மெய்ப்பாடுகளை எல்லாம் வரன்முறைப்படி அறிதல் அரிது.

எனவே அகத்திணைக் காதலர், உயர்ந்த நிலையினர் ஆதலின், அவர்களிடையே அமையவேண்டிய பொருத்தங்களை எடுத்துக் கூறுகிறார்.

முதற்கண் இருவரும் ஒத்த நல்ல உயர்ந்த தன்மையராய் அமைதல் அரிது. உலகில் ஓரளவு ஒப்புமையுடையார், சற்றே கூடுதல் குறைவாக ஒத்த பண்புடையார் கணவன் மனைவியராய் அமைதலே பெரும்பான்மை.

இருவருமே மிகவுயர்ந்த பண்பாளராய், உயிருக்குயிரான காதலுடன் இணையும் திருமணம் நூற்றில் ஒன்றேனும் நடைபெறும். அத் தகையவரையே தொல்காப்பியர் நமக்கு அறிமுகப்படுத்துகிறார்.

இன்று பொருந்தாக் காதலர்களையே நிரம்பக் காட்டி, சிக்கல்கள் வருவதும் போவதுமாகக் கதைகட்டுகிறார்கள்.

**நல்லதைக் காட்டினால் நல்லது வளரும்**
**தீயதைக் காட்டினால் தீயதே வளரும்**

இரண்டும் உலகில் உள்ளனவே. ஒரு கலைஞன், எழுத்தாளன் உலக மாந்தரை எத்திசை நோக்கி அழைத்துச் செல்ல வேண்டும் என்பதே முக்கியம். இந்த எழுத்தறம் எழுத்துத் திறத்தால் வெற்றிபெறவேண்டும்.

முன்பு சுட்டியவாறு, தன்னிகரற்ற உயர்ந்த காதலர்கள் எதிர்பாராது கண்டு, காதல்கொள்வது நல்வினைப் பயன் - தெய்வச் செயல் ஆகும்

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**

**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோ னாயினும் கடிவரை இன்றே (தொல்.1036)**

இந்த இடத்தில்தான்(களவியலில்), தொல்காப்பியர் காதலர்களிடம் இருக்கவேண்டிய பண்பு நலன்களை விதந்தோதுகிறார்.

ஆடவன் பெருமையும் சீரிய அறிவும் உடையவனாகவும் பெண் அச்சம், நாணம், மடப்பம் (இளமைத் தன்மை) உடையவளாகவும் இருத்தல் வேண்டும் என்ற நூற்பாக்களை இணைத்துள்ளார்.

களவுக் காதல் என்பதால், பண்பற்ற முறையில் நடப்பதோ, முறை தவறி வாழ்வை இழப்பதோ நடந்துவிடுதல் கூடாது.

❄ ❄ ❄

## தொல்காப்பியர் விளக்கும் பத்துப் பொருத்தங்கள்

இனி இத்தகைய காதலர்களிடம் அமைய வேண்டிய பத்துப் பொருத்தங்களைத் தொல்காப்பியர் கூறியிருக்கும் சிறப்பினைக் காண்போம்.

பிறப்பே, குடிமை, ஆண்மை, ஆண்டொடு
உருவு, நிறுத்த காம வாயில்,
நிறையே, அருளே, உணர்வொடு, திருஎன
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே

(தொல். 1215)

**பொதுவான பொருள்:**

பிறப்பு - நற்குடியிற் பிறத்தல்.

குடிமை - பிறந்த அக் குடியின் சிறப்புக்கேற்ற ஒழுக்கமுடைமை.

ஆண்மை - ஆளும் தன்மை, பெருமிதமானவை அனைத்தும்.

ஆண்டு - அகவை ஒப்புமை.

உருவு - உடல் தோற்றம்.

நிறுத்த காம வாயில் - உடற்கண் அமைந்த காம இன்பம் நுகர்தற்கான கூறுகள்.

நிறை - திருமணமான பின் மனத்தை ஒருவழி நிறுத்தவல்ல தற்கட்டுப்பாடு.

அருள் - பொதுவாக அருளுடையவராகத் திகழ்தல்.

உணர்வு - மன உணர்ச்சி நிலைகள்.

திரு - செல்வமுடைமை. செல்வர் போலும் மனமகிழ்ச்சியுடைமை இதிலடங்கும்.

காதலர் ஆண் பெண் இருவரிடமும் இவை அமைந்திருத்தலே சிறந்த காதலர்க்குரிய ஒப்புமையாகும்.

## இளம்பூரணர் விளக்கம்

இளம்பூரணர் களவியலில் 'ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப' என்னும் சூத்திரத்தின் விளக்கமாக, இப் பத்து ஒப்புமைகளையும் முன்னதாகவே விளக்கிவிடுகிறார்.

'அவற்றுள் **பிறப்பாவது** அந்தணர் அரசர் வணிகர் வேளாளர், ஆயர் வேட்டுவர் குறவர் நுளையர் என்றாற்போல வரும் குலம்'.

**குடிமையாவது** அக் குலத்திலுள்ளார் எல்லாரும் சிறப்பாக ஒவ்வாமையின், அச் சிறப்பாகிய ஒழுக்கம் பற்றிய குடிவரவைக் 'குடிமை' என்றார்.

> **பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா**
> **செய்தொழில் வேற்றுமை யான்** (குறள். 972)

எனப் பிறரும் குலத்தின்கண்ணே சிறப்பென்பது ஒன்றுண்டென்று கூறினாராகலின்.

**ஆண்மையாவது** ஆண்மைத் தன்மை. அஃதாவது ஆள்வினையுடைமையும் வலி பெயராமையுமாம். 'மொழியாததனை முட்டின்று முடித்தல்' என்பதனான் தலைமகள் மாட்டுப் பெண்மையும் கொள்ளப்படும். அது பெண்டிர்க்கு இயல்பாகிய நாணம் முதலாயினவும் பெண்ணீர்மையும்.

**ஆண்டு** - என்பது ஒருவரின் ஒருவர் முதியரன்றி ஒத்த பருவத்தராதல்; அது குழவிப் பருவம் கழிந்து பதினாறு பிராயத்தானும் பன்னிரண்டு பிராயத்தாளும் ஆதல்.

**உருவு** என்பது வனப்பு.

**நிறுத்த காமவாயில்** என்பது நிலைநிறுத்தப்பட்ட புணர்ச்சிக்கு வாயில். அஃதாவது ஒருவர்மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு.

**நிறை** என்பது அடக்கம்.

**அருள்** என்பது பிறர் வருத்தத்திற்குப் பரியும் கருணை.

**உணர்வு** என்பது அறிவு.

**திரு** என்பது செல்வம். இப் பத்து வகையும் ஒத்த கிழவனும் கிழத்தியும் எதிர்ப்படுவர் எனக் கொள்க".

இவ்வாறு பழைமை தழுவி உரை எழுதியுள்ளார்.

**பேராசிரியர் விளக்கம்**

பேராசிரியர் இது தலைமகளிடத்து ஒப்புமை கருதித் தோன்றும் மெய்ப்பாடுகள் என்று கூறுகிறார். மெய்ப்பாடுகள் தோன்றுதற்குரிய ஒப்புமைகள் இருபாலர்க்கும் பொதுவே. 'ஒப்பினது வகையே' என்று தொல்லாசான் சுட்டியிருப்பவும், பேராசிரியர் தலைமகளுக்குரிய மெய்ப்பாடுகள் என்பது, மேலும் ஆராய்தற்குரியதாகும்.

(பொழிப்புரை) 'ஒத்த பிறப்பும் ஒத்த ஒழுக்கமும் ஒத்த ஆண்மையும் ஒத்த பிராயமும் ஒத்த உருவும் ஒத்த அன்பும் ஒத்த நிறையும் ஒத்த அருளும் ஒத்த அறிவும் ஒத்த செல்வமுமெனப் பத்து வகைய தலைமகள் ஒப்பினது பகுதி என்றவாறு'.

(விளக்கம்) 'இவை தலைமகனுக்கு மெய்ப்பாடு எனப்படாவோ எனின், படுமாயினும் அஃது ஒப்பினது வகை என்றதனானே தலைமகட்கே உரிமை கொளப்படும்.

குடிமையொடு பிறப்பிடை வேற்றுமை என்னையெனின் பிறப்பு என்பது குடிப்பிறத்தல்; அதற்குத் தக்க ஒழுக்கம் '**குடிமை** எனப்படும். குடிப்பிறந்தாரது தன்மையைக் குடிமை என்றான் என்பது. அதனை ஊராண்மை எனவும் சொல்லுப.

**ஆண்மை** புருடர்க்காம். அஃது ஆள்வினை எனப்படும். இது தலைமகட்கு ஒப்பதன்றாலெனின், குடியாண்மை என்புழி ஆண்மை என்பது இருபாற்கும் ஒக்குமாதலின் அமையுமென்பது.

**யாண்டு** என்பது ஒத்தவாறு என்னையெனின், பன்னீர்யாண்டும் பதினாறு யாண்டுமே பெண்மையும் ஆண்மையும் பிறக்கும் பருவமென்பது ஓத்தினுள் ஒப்பமுடிந்தமையின் அதுவும் ஒப்பெனவே படும்.

**'உருவு நிறுத்த காமவாயில்'** என்பது பெண்மை வடிவும் ஆண்மை வடிவும் பிறழ்ச்சியின்றி அமைந்தவழி, அவற்றுமேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு என்றவாறு.

இங்ஙனம் ஓதியவகையான் இவை ஒன்பதாகலின் பத்தாமாறு என்னையெனின், காமவாயிலெனப்பட்ட இயற்கை

அன்பு வடிவு பற்றியல்லது தோன்றாமையானும், குணம் பற்றித் தோன்றுவன செயற்கை அன்பாகலானும் உருவினை அன்பிற்கு அடையாகக் கூறினானாயினும் உருவு சிறப்புடைமையின் அதனை நாம் பகுத்தெண்ணிக் கொண்டாம் என்பது,...

அஃதேல் உருவென்பது குறிப்பின்றாகலின் மெய்ப்பாடாமாறு என்னையெனின், அவ் உரு பற்றி மனத்தின்கண் பிறப்பதொரு தருக்குண்டன்றே? அதனான் அது மெய்ப்பாடு எனப்படும்.

நிறை என்பது மறை பிறர் அறியாமை. (கலி. 133) நெஞ்சினை நிறுத்தல்.

அருள் என்பது எல்லா உயிர்க்கும் இடுக்கண் செய்யாத அருளுடையராயிருத்தல். அதுவும் காமத்திற்கு இன்றியமையாததொரு குறிப்பு. உணர்வென்பது அறிவுடைமை; அஃதாவது உலகியலால் செய்யத் தகுவது அறிதல்.

'திரு' என்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத்தகவிற்றாகியதோர் உள்ள நிகழ்ச்சி. அது வினையுள்ளுடைமை எனவும் படும். இவை எல்லாம் இருவர்க்கும் தம்மின் ஒக்கும் பகுதி எனவும் இவை பற்றி மெய்ப்பாடு பிறக்குமெனவும் கூறியவாறு.

'வகை' என்றதனான் 'ஆண்மை பெண்மை' என்பது பிறப்பு ஒப்புமை எனவும், 'குடிமை வகை' என்பது இருவர்க்கும் இளமைப் பருவத்தே தங்கிய ஒழுக்கம் எனவும் கொள்க...

இனி, ஏவன் மரபின் ஏனோர் பாங்கினும் அடியோர் பாங்கினும் வினைவலர் பாங்கினும் - தம்மின் ஒத்த பிறப்புக் காரணமாக உள்ளத்து வரும் காமக் குறிப்பு முதலாயினவும் கொள்க.

இவ் எண்ணப்பட்டன ஒத்துவரினன்றி அறிவுடையார்கண் காமக் குறிப்பு நிகழாமையின் இவற்றையும் ஈண்டு மெய்ப்பாடென்று ஓதினான் என்பது.

- பேராசிரியர் சங்கப் பாடல்களில் இருந்து இவற்றுக்குச் சான்றுகள் காட்ட முயல்கிறார். இம் மெய்ப்பாடுகள் பற்றி,

உய்த்துணரலாமே யன்றி, இவையே முழுமையாய் அமைந்த பாடல்கள் கிடைப்பது அரிது.

**பத்துப் பொருத்தம் பற்றிய நடைமுறை விளக்கம்**

உலகில் திருமணத்திற்குக் கணியம் - சோதிடம் பார்ப்பவர்களும் பத்துப் பொருத்தம் பார்க்கின்றனர். தொல்காப்பியனாரும் பத்துப் பொருத்தம் என அதே எண்ணில் கூறுவானேன்?

கணியம் பார்ப்பதை இவர் வெளிப்படையாக மறுக்கவில்லை. ஆனால் இயல்பாகப் பார்க்கவேண்டிய, அறிவு சார்ந்த பொருத்தங்களே இங்குக் கூறப்படுகின்றன.

பொதுவாக உலகினர் 'சோடிப் பொருத்தம்' பற்றிப் பேசிக் கொள்வர். தோற்றப் பொலிவு, உயரம், நிறம், களையான பொலிவு பற்றியெல்லாம் பேசுவர். குறிப்பாக அகவை ஒப்புமை பற்றிக் கருதுவர்.

திருமணம் என வந்தாலே நல்ல குலம் பார்த்தே பெண்ணைக் கொடுப்பர். வணிகர், வேளாளர் என்பதைவிட, பண்பான நல்ல பெயருடன் கூடிய, ஊரார் போற்றும்படியான குலமா என ஆராய்வர். அத்தகைய 'நல்ல இடமே' யாயினும், மணமக்களின் ஒழுக்கம் அவர்கள் பிறந்த குலத்திற்கு ஏற்றதா என அறிய அவாவுவர்.

பிறப்பு, குடிமை என்பது பற்றிக் கருத்து வேறுபாடு இல்லை. நல்ல குடியிற் பிறந்தவன் அதற்கேற்ற நற்பண்பு இல்லாதவனாக வளர்வதுண்டு. எனவேதான் குலத்தையும் - குடியையும் பார்; அதற்கேற்ற ஒழுக்கமும் உளதா எனப் பார் எனப் பகுத்துக் கூறுகிறார்.

இது பணக்காரர் ஏழை என்ற பாகுபாடோ, வருணாசிரம வேற்றுமையோ அன்று. ஒரு குடிவழி - தாத்தா முதல் பேரன்வரை, சுற்றம் அமைவது குலம்.

இனி ஆண்டு என்பது வயதுப் பொருத்தம். இருவரும் ஒரே வயதினராதல் வேண்டும் என நாம் எண்ணுவோம். அது தவறு.

இளம்பூரணர் 'ஆண்டு என்பது ஒருவரின் ஒருவர் முதியரின்றி ஒத்த பருவத்தாராதல்' என எழுதுகிறார். இது ஆரியர், 45 ஆண்டு பிராயச்சித்தம் காத்தவன், குழந்தை அனையாளை மணப்பது; குழந்தை மணம் மற்றும் கிழவனுக்குக் குமரியைத் தரும் பொருந்தா மணம் ஆகிய இவை யாவும் தமிழர் பண்பாடன்று என்று உணர்த்துகின்றது.

இதற்குப் பேராசிரியர் உரை, நுட்பமானது. 'யாண்டு என்பது ஒத்தவாறு என்னையெனின், பன்னீர் யாண்டும் பதினாறு யாண்டுமே பெண்மையும் ஆண்மையும் பிறக்குமென்பது ஒத்தினுள் ஒப்ப முடிந்தமையின் அதுவும் ஒப்பெனவே படும்.'

அஃதாவது, அக்கால நிலையில் ஒரு பெண், தனது பன்னிரண்டாம் அகவையிலேயே பெண்மைக்குரிய தன்மையை முழுமை பெற அடைகிறாள். இதை அவளுக்குப் பெண்மை பிறக்கும் பருவம் என்று கூறுகிறார்.

ஓர் ஆணுக்குரிய ஆண்மைத் தன்மை பிறக்கும் பருவம், அவனது பதினாறாவது வயதில் பிறக்கிறது. எனவே இருவரும் திருமணத்திற்குப் பொருத்தமுடையவராகின்ற பருவ ஒப்புமையே, இங்கு 'ஒப்பு' எனப்படுகிறது.

கண்ணகிக்குப் பன்னீராட்டையிலும் கோவலனுக்கு ஈரெட்டாண்டு அகவையிலும் திருமணம் நடந்தது. மாதவியும் ஐந்தாம் ஆண்டு நாட்டியம் பயிலத் தொடங்கி. ஏழாண்டு முடிந்தபோது அரங்கேறுகிறாள்.

சி.எம். பௌரா, தம் கிரேக்க வாழ்வியல் அறிமுக நூலில் (Greek Experience), அங்கும் ஒரு பெண் தனது பன்னிரண்டாம் அகவையில், மணம் முடிக்கத்தக்க பருவத்தை அடைகிறாள் என்று எழுதுகிறார். பழங்கால உடற்கட்டு நிலை இது.

அடுத்து **'ஆண்மை'** என்பது எங்ஙனம் ஒப்புமையாகும் என்ற கேள்வி எழுகிறது. ஆடவர்க்கு ஆண்மையும் பெண்களுக்குப் பெண்மையும் தானே கூறப்படும் என்பர்,

ஆடவர்க்கு ஆள்வினை என்பதுபோல மகளிர்க்கும் குடியாண்மை எனல் உண்டு. எனவே, இது இருபாற்கும் ஒக்கும்

என்பது பேராசிரியர் கருத்து. இன்னும் விளங்குமாறு சொன்னால், ஆண்மை - ஆளும் தன்மை.

இளம்பூரணர் இருபாற்கும் அவரவர் நிலையில் இப் பண்பு உண்டு என்று அவையே தம்மிடை ஒப்புமையாம் என்பார்.

ஆணின் தன்மை வேறு; ஆளும் தன்மை வேறு. ஆள்வினை உடைமை எனில் இருவருக்கும் பொருந்தும் தானே?

அடுத்து 'உருவு' என்பது. இது தோற்றம் - அழகு பற்றியது. ஆண், பெண் வடிவழகு - அல்லது வடிவ ஒற்றுமை என்பது பேராசிரியர் கருத்து. இதனைப் பெரிதுபடுத்தலாகாது. இவளது உயரம், அழகு போன்றவற்றுக்கு, இவன் ஒப்புமையாக உள்ளான் எனக் காண்பவர் கருதுமாறு அமைவதே உருவ ஒப்புமை. இந்தச் சோடிப் பொருத்தம் பற்றியே உலகினர் பெரிதுபடுத்திப் பேசுவர். 'சுவடு என்பது ஒன்றன் நிழற்படியாகும். அது 'சோடு' என ஆகும். சோடி - ஒன்றைப் போல் ஒப்புமைப்பட்ட மற்றொன்று. சூடு - ஜுடு ஆவதுபோல் சோடி - ஜோடி ஆகிவிட்டது.

நிறுத்த காம வாயில் என்பது, உருவு என்பதுடன் இணைத்தே கூறப்பட்டுள்ளது. மிக நுட்பமான கருத்து இது. இது உடலை ஒட்டிய உணர்ச்சி. "நிலைநிறுத்தப்பட்ட புணர்ச்சிக்கு வாயில்; அஃதாவது ஒருவர் மாட்டு ஒருவர்க்கு நிகழும் அன்பு." என்பது இளம்பூரணம். அன்பு என மங்கலமாகக் கூறினும் புணர்ச்சிக்கு உரிய உணர்ச்சி இது.

இதற்குப் பேராசிரியர் விரிவாக விளக்கம் தருகிறார்: "வடிவ ஒற்றுமை அமைந்தவழி, அவற்றுக்கு மேல் நிகழும் இன்பத்திற்கு வாயிலாகிய அன்பு"... "காம வாயில் எனப்பட்ட இயற்கை அன்பு வடிவு பற்றியல்லது தோன்றாமையானும்.."

ஆடவனது உடற்கட்டு, மிகு காமப் புணர்ச்சி ஆர்வமுடையதாகலாம்; அவள் அத்துணை அளவு விரும்பாத உடல்கட்டும் மென்மையும் உடையவளாகலாம். அல்லது அவள் நல்ல உடற்கட்டுடன் கூடிய, காம இன்ப நுகர்ச்சியில் கூடுதலான ஆர்வமுடையவளாகலாம். அவன் மெலிந்து, இதில் அதிக ஈடுபாடின்றி இருக்கலாம். ஒப்புமைகளிலேயே, இக் காம இன்ப

உணர்ச்சியிலும் அதற்கேற்ற உடலமைப்பிலும் உள்ளதே மிக முக்கியமானதாகும்.

**நிறை** - என்பது மறை பிறர் அறியாமை நெஞ்சினை நிறுத்தல்(பேரா.). நிறை என்பது அடக்கம் உடைமை என்பார் இளம்பூரணர். குடும்ப வாழ்வில் ஆயிரம் இருக்கும். அவற்றைப் பலரறியப் பறை சாற்றுதல் தவறு. மேலும் திருமணமான பின் ஆணும் பெண்ணும் தங்கள் மனத்தைக் கண்டபடி ஓடவிடாது தடுத்து நிறுத்துதலையும் 'நிறை' என்பது குறிக்கும்.

**அருள்** - என்பது பிறர் வருத்தத்திற்குப் பரியும் கருணை என்பார் இளம்பூரணர். பிறரெல்லாம் எல்லா உயிர்கள் மாட்டும் கொள்ளும் அருளுடைமையைக் கூறினர். அவ் வுள்ளமுடையாரே, கணவனுக்கோ, மனைவிக்கோ ஒரு துன்பம் வரின், அதனைத் தமக்கு வந்ததுபோல் கருதித் துடிதுடித்துப் போவர்.

**உணர்வு** - என்பதற்கும் அறிவு, உலகியலறிதல் என்று உரை கூறியுள்ளனர். ச. பாலசுந்தரம், 'ஒருவர்தம் உள்ளக் குறிப்பை அறிந்தொழுகும் நுண்ணறிவு' என எழுதுகிறார்.

உணர்வு ஒப்புமை மிகப் பலவகைப்படும். ஒருவர்க்கு ஒன்று பிடிக்கும்; மற்றவர்க்கு அது பிடிக்காது. இதில் பொறுமை வேண்டியிருக்கும். பெரும்பாலான சுவை உணர்வுகளில் இவ் உணர்வு ஒப்புமை தேவைப்படும்.

**திரு** - என்பது செல்வம் என்பார் இளம்பூரணர். பேராசிரியர் "திரு என்பது பொருளுடைமையும் பொருள் கொணர்ந்து துய்த்தலுமின்றி எஞ்ஞான்றும் திருத் தகவிற்றாகியதோர் உள்ளநிகழ்ச்சி. அது வினையுள்ளுடைமை எனவும் படும்" என்பர். கணவன் மனைவியாகத் திருமணமானவரிடையே, அவள் செல்வக் குடும்பத்திலிருந்து வந்திருக்கலாம்; அல்லது அவள் ஏழைக் குடும்பத்தவளாகச் செல்வனை மணந்திருக்கலாம். இதில் வேற்றுமை பாராட்டாது, திரு என்பது 'செல்வம் என்பது சிந்தையின் நிறைவே' என்பதுபோலக் கொள்வதாகும்'. திருவுடையராதல் போலும் மனமகிழ்ச்சி வேறு. அச் செல்வமே என்பது வேறு. பெருந்தகையார் இதில் மனவேற்றுமை கருதார். திருவுடையார் போலவே மனமகிழ்ச்சியோடு வாழ்பவர் பலர்.

அவரிடம் செல்வம் இல்லையாயினும் மனநிறைவிற் குறை இராது. சிலர் செல்வம் இருந்தும் அஃதில்லார்போன்ற மனநிலையுடன் காணப்படுவர்.

எனவே 'திரு' என்பதற்குத் திருவுடையார் போலும் மனமகிழ்ச்சி என்ற பேராசிரியர் உரை போற்றத்தக்கதாகும்.

இப் பத்தும் மணமக்களாதற் குரியாரிடம் அமைய வேண்டிய பொருத்தங்களாகும். அவர்களிடம்தான் மெய்ப்பாட்டியலில் வரும் மெய்ப்பாடுகள் முழுமைபெற வெளிப்படும் என்பது கருத்து.

இது, மேல்வரிச் சட்டமாகக் கூறப்படுகிறதே யன்றி, இவற்றில் ஒன்றிரண்டு குறையினும் கூடினும் தவறாகாது. உலகில் இவை பல்வேறு படிநிலைகளாக அமைதல் கண்கூடு. எல்லாவற்றுக்கும் மேலாக, காதலர்களிடையே நீங்காத பேரன்பும் மன ஒற்றுமையும் அமையுமேல், இவை சமனிலைப் படுத்தப்பட்டு, இன்ப வாழ்வு சிறக்கும்.

மனஉணர்வுகளின் வெளிப்பாடே மெய்ப்பாடு. மெய் - உடல். பாடு - தோன்றுதல். 'மெய்' என்பதை ஒரு பாடலின் உட்பொதி பொருளாகவும் கொண்டார் தொல்காப்பியர். பாடலைப் படிக்கும்போது ஏற்படும் உணர்வு வெளிப்பாடுகளை, கவிதை மெய்ப்பாடுகளாகக் கண்டார். அங்ஙனமாயின் அப் பாடல்களில் வரும் தலைவன், தலைவியர் எத்தகையவராக இருந்தால், தாம் விளக்கும் மெய்ப்பாடுகள் தோன்றும் என்பதை இந் நூற்பாவில் விளக்குகிறார். இவை இன்றைய பார்வையில், மணமக்களுக்கான திருமணப் பொருத்தமாகக் கொள்ளப்படுகின்றன.

❄ ❄ ❄

## மணமகன், மணமகளிடையே அமையக் கூடாத பொருந்தாக் குணங்கள்

கணியர்(சோதிடர்) சாதகம் பார்த்து, இது நல்ல யோக சாதகம்தான். ஆனால் செவ்வாய் தோசம் இருக்கிறது என்பார். இன்னும் களத்திர தோசம், புத்திர தோசம் மாங்கல்ய தோசம் எனக் கூறி, அவற்றுக்குப் பணம் செலவழித்துப் பரிகாரம் செய்தால் தோசம் போய்விடும் என்பார்.

தொல்காப்பியர் பன்னிரண்டு ஆகாப் பண்புகளைக் கூறி, அவற்றைப் போக்கவேண்டும் என்று கூறுகிறார். திருமணத்திற்கு முன் இத்தகைய தீய குணங்கள் இல்லாதவராகப் பார்த்து மணம் பேச வேண்டும். திருமணமாகிவிட்டாலோ, இத் தீய குணங்களை அறிவுரை கூறித் திருத்த வேண்டும். இன்றேல் இல்லறம் இனிதாக அமையாது.

**நிம்பிரி, கொடுமை, வியப்பொடு, புறமொழி,**
**வன்சொல், பொச்சாப்பு, மடிமையொடு, குடிமை,**
**இன்புறல், ஏழைமை, மறப்போடு ஒப்புமை**
**என்றிவை இன்மை என்மனார் புலவர்** (தொல்.1216)

### இளம்பூரணர் விளக்கம்

இந் நூற்பாவும் ஒப்புமை பற்றியதே என்பது இளம்பூரணர் கருத்து. அவர் தரும் விளக்கம் வருமாறு:

இவை தலைமக்கட்கு ஆகாத குணம்.

நிம்பிரி என்பது அழுக்காறு; அவ்வியம் என்பதும் அது.

கொடுமை என்பது அறனழியப் பிறரைச் சூழும் சூழ்ச்சி.

வியப்பு என்பது தம்மைப் பெரியராக நினைத்தல்.

புறமொழி என்பது புறங்கூறுதல்.

வன்சொல் என்பது கடுஞ்சொற் கூறல்.

பொச்சாப்பு என்பது தம்மைக் கடைப்பிடியாமை. அது சோர்வு.

மடிமை என்பது முயற்சியின்மை.

குடிமை யின்புறல் என்பது தம் குலத்தினானும் தம் குடிப் பிறப்பினானும் தம்மைப் பெரிதாக மதித்து இன்புறல்.

ஏழைமை என்பது பேதைமை.

மறப்பு என்பது யாதொன்றாயினும் கற்றதனையும் கேட்டதனையும் மறத்தல்.

ஒப்புமை என்பது ஆண்பாலாயினும் பெண்பாலாயினும் தான் காதலிக்கப்பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி அவர் போல்வார் என ஆண்டு நிகழும் உள்ள நிகழ்ச்சி. அஃது உலகின்கட் கீழ்மக்கள் மாட்டும் கண்ணிலோர் மாட்டும் நிகழ்தலின் அது தலைமக்கட்கு ஆகாது என விலக்கப்பட்டது.

**பேராசிரியர் விளக்கம்**

இது காமக் குறிப்பிற்காகாதன கூறுகின்றது.

**நிம்பிரி** - பொறாமை தோன்றும் குறிப்பு; இவை இந்நாட் சிறிது பொறுத்தாய் என்றாற் போல்வன. இது பொறுமையின்மை.

**கொடுமை** - கேடு சூழ நினையும் தீவினையுள்ளம்.

**வியப்பு** - தலைமகள்பால் தெய்வத் தன்மை கண்டான்போல் வியந்து ஒழுகுதல், இனிக் குணத்தின் மேற்கொண்டு தன்னை வியத்தலெனினும் அமையும்.

**புறமொழி** - புறங்கூற்று.

**வன்சொல்** - கண்ணோட்டமின்றிச் சொல்லுஞ் சொற்கள்.

பொச்சாப்பு - கடைப்பிடியின்றி ஞெகிழ்ந்திருத்தல்.

மடிமை - சோம்புள்ளம்.

குடிமை - இவள் இழிந்த பிறப்பினள் எனத் தன்னை மதித்து
ஒழுகுதல்.

இன்புறல் - ஒருவர் ஒருவரின் தாமே இன்புறுகின்றாராக நினைத்தல்.

ஏழைமை - நுழைந்த உணர்வினரன்றி வரும் வெண்மை (அறிவின்மை)

மறப்பு - மறவி

ஒப்புமை - இன்னாளை ஒக்கும் இவளென்று அன்பு செய்தல்.

இளம்பூரணர் மேற்காட்டிய இரண்டு நூற்பாக்களையும் பொதுவாகத் தலைமக்கட்குரியனவாகக் கொண்டு உரை கூறியுள்ளார். அதுவே பொருத்தமாகும்.

பேராசிரியர் முன்னதைத் தலைவிக்குரிய மெய்ப்பாடு என்றும் பின்னதைத் தலைவனுக்குரியது என்றும் கொண்டு, உரை கூறியது பொருந்தாது. இனி இவற்றை உலகிடை வைத்துச் சிலவற்றைக் காணலாம்.

**உலக நடைமுறை விளக்கம்**

ஒப்புமை நூற்பாவில் பிறப்பே, குடிமை என இரண்டு கூறுகிறார்.

பெருஞ்செல்வர் ஒருவர் தம் ஒரே மகளுக்கு மாப்பிள்ளை தேடி ஊர் ஊராய்ப் போனார். ஓர் ஊரில் அந்த ஊரிலேயே பெருஞ்செல்வரான ஒருவர் வீடு இருந்தது. தாத்தா காலத்திற்கு முன்பிருந்தே பொது நலனுக்குப் பாடுபட்டு, ஊரில் நல்ல பெயரெடுத்த 'நற்குடி' என்று, ஊரார் கூறினர். வந்த செல்வரிடம், "உங்களுக்கு நிகரான பெரிய குடி அது. ஆனால் பையனுக்கு அப்பா, தம் தந்தையார் சேர்த்த நல்ல பெயரையெல்லாம்

கெடுத்துவிட்டார். மாப்பிள்ளைப் பையன் மிக அழகாக இருப்பான். ஆனால் சிலபோது குடித்துவிட்டு ஊதாரிகளோடு ஊர் சுற்றித் திரிகிறான். கலியாணம் செய்து, காலில் கட்டுப்போட்டுவிட்டால் திருந்திவிடலாம். செல்வ வளம் இன்னும் பல தலைமுறைக்குப் போதும்". பெண்ணின் தந்தை இவற்றையெல்லாம் கேள்விப்பட்ட பிறகு என்ன முடிவெடுப்பார் என்று நினைக்கின்றீர்கள்?

பணத்திற்கு ஆசைப்பட்டு, திருமணம் செய்து பார்க்கத் துணிவாரா?

மாப்பிள்ளை தேடிய அப் பெரியவருக்கு உறவில் ஒரு பையன் இருந்தான். ஆனால் இவர்கள் அளவு பணக்காரன் அல்லன். பையன் மிக நல்ல தோற்றம்; நல்ல குணம். இவர் மகளுக்குக்கூட அவன்பால் ஒரு நாட்டமுண்டு. ஆனால் பெற்றோருக்குப் பயந்து அவள் வாய்திறக்கவில்லை.

அவன் ஒரே பையன்; தந்தையார் காலமாகிவிட்டார். மூன்று சகோதரிகள். இவன் மூத்தவன் என்றாலும் தன் தங்கையர் மூவருக்கும் திருமணம் செய்து வைத்த பிறகே, தான் மணம் செய்து கொள்வதென, ஒரே உறுதியாய் இருந்தான். இப்போது பெண்களுக்குத் திருமணமாகிவிட்டதால், அவன் திருமணத்திற்கு ஆயத்தமாகிவிட்ட நேரம். ஆனால் தங்கள் குடிப்பெருமையைக் கருதிய செல்வர் தயங்கினார். இறுதியில் அவன் குணத்தையும் ஊராரிடம் அவனுக்குள்ள நல்ல பெயரையும் கருதி, அவனுக்குத் தம் மகளைக் கொடுப்பதென்ற முடிவுக்கு வந்தார். இதனைப் பார்க்கும்போது,

**குற்ற மிலனாய்க் குடிசெய்து வாழ்வானைச்**
**சுற்றமாய்ச் சுற்றும் உலகு** (குறள். 1025)

என்ற திருக்குறள் நினைவுக்கு வரும். குடி பெரியதாயினும் அக்குடிக்குரிய தன்மை, பெருமை இல்லாததால், அவர்களுடன் சுற்றமாய்ச் சுற்ற விரும்பவில்லை. பிறப்பு - உயர்ந்த குடியினதாயினும் ‘குடிமை’ எனும் அக்குடிக்குரிய தன்மை நல்லொழுக்கம் இல்லை என்றால் பயன் ஏது?

இந்த உறவுப் பையன் குற்றமற்றவன் மட்டுமன்றி, 'குடிசெய்து' வாழ்கின்றவன். அது என்ன 'குடி செய்தல்'. அதாவது தளர்ந்த குடியைப் பேணுவது; குடிப் பெருமையைக் காப்பது எல்லாம் இதிலடங்கும். குடிமை என்பது குடிக்கு ஏற்ற நல்லொழுக்கம். நற்குடித் தன்மையில்லாதது, செல்வக் குடியே யாயினும் உலகம் ஒவ்வாது. 'பிறப்பு' என்றார்; அதாவது நற்குடிப் பிறப்புக்கேற்ற ஒழுக்கமில்லாதவர், அக் குடியில் தவறிப் பிறந்தவர் எனக் குறிப்பால் இது உணர்த்துகிறது.

'உருவு நிறுத்த காம வாயில்' என்பதும் இதுபோல் அறிவியல் முறைப்படி, மிகவும் சிந்திக்க வேண்டிய ஒன்றாகும். உருவம் ஒருவரது உடலமைப்பு - வடிவம். ஒற்றை நாடி மெலிந்தவர். சிலர் மிகப் பருத்திருப்பர். அளவானமைந்தோரே பெரும்பான்மை. உடற்கட்டுக்கு ஏற்பக் காம இன்பம் துய்க்கும் மனக்கிளர்ச்சி, உடலுணர்ச்சி அமைதல்கூடும்.

ஆக இந்த 'உருவுக்கும், அதில் நிறுத்த காம(உணர்வு) வாயிலுக்கும் தொடர்புண்டு என்பதனால், நம் தொல்லாசான் இவை பிரித்தறியத்தக்கவையே - எனினும் ஒன்றினொன்று நெருங்கிய தொடர்புடையவை என்பதும் தோற்ற, அத் தொடரை அமைத்துள்ள திறம் வியப்பைத் தருகிறது. உரையாசிரியர்களும் இதைப் பிரித்தும் இணைத்தும் பொருள் கூற முயல்வதைக் காண்கின்றோம்.

இன்று பல மண முறிவுகளுக்கு இதை ஒரு காரணமாகக் காட்டுகின்றனர். மலடு, ஆண்மையில்லை என வெளிப்படக் கூறி மண முறிவு வேண்டுகின்றனர். இவற்றுக்கான மருத்துவ உடற்கூறு ஆய்வுகளும் நடக்கின்றன. சிலர் இதனைத் திருமணம் பேசும்போதே, இருவருக்கும் உடற்பரிசோதனையும் பார்ப்பது நல்லது எனவும் எழுதுகின்றனர்.

ஒருவரைப் பார்த்ததுமே, பெரிதும் அவர் இதில் எத்தகையவராக இருக்கக்கூடும் எனக் கணித்துவிடுவர். முற்கால மக்களிடம் இத் திறன் நன்கமைந்திருந்ததால், மருத்துவப் பரிசோதனை யெல்லாம் இன்றியே, கண்டும், பேசியும், பழகியும் கணித்துவிடுவர்.

அருளுடைமை அறநூல்களிற் கூறப்படுவது. இங்கு மணமக்கள் கருணையுள்ளம் கொண்டவர்களாக இருக்க வேண்டும். நாத்தனாருக்கு உடம்பு சரியில்லையா? 'நல்லா வேண்டும், இன்னும் வேண்டும்' என்று சபிக்கும் குணம் கூடாது. கொண்டவனுக்கு அல்லது கொண்டவளுக்கு ஒன்று என்றால் துடிக்கும் உள்ளமே அருள் உள்ளம். இங்கு அன்பு என்னாது ஏன் 'அருள்' என்றார்? அன்புதானே காதல். அதனால் குடும்பமானவரிடை அந்த அன்பு தொடங்கிவைத்தது; அருள்தான் வாழ்க்கை முழுதும் அந்த அன்பு ஈன்ற குழந்தைபோல அமைதல்வேண்டும்.

'உணர்வு' ஒப்புமை மிக முக்கியம். ''எனக்குத் தொலைக்காட்சியே பிடிக்காது; அவளோ அப் பெட்டியடியிலேயே இருப்பவள்.'' இத்தகைய ஆயிரம் உணர்வுநிலை வேறுபாடுகள் வரும். அவற்றில் ஒத்துப்போகும் மனமே பயனுடையதாய், குடும்பத்தை வாழவைக்கும்.

'திரு' என்பது செல்வம். செல்வர்கள் தம்மையொத்த செல்வக் குடும்பத்தைத் தானே நாடுகிறார்கள். தொல்காப்பியர் அதைக் கருதிக் கூறியிருக்க வாய்ப்பில்லை.

ஒருவன் ஓர் ஏழைக் குடும்பத்துப் பெண்ணை அவளது அழகும் பண்பும் பொலிவும் கருதி மணந்துகொள்கிறான். அவனுக்குப் பல செல்வக் குடும்பங்களிலிருந்து பெண் தர வந்தனரெனினும், அவன் இவளையே, அச் செல்வத்தினும் மேலாக மதித்தான். எனவே 'திரு' என்பது செல்வம் என்பது மட்டுமன்றி, செலவமுடையார்போல நீங்காத மன மகிழ்ச்சியுமாம் என்ற நம் முன்னோர் கருத்து மிகு சிறப்புடையது.

நல்ல குடும்பத்தில் ஓர் இடர்ப்பாடு. திடீரெனத் தொழிலில் பேரிழப்பு ஏற்பட்டுவிட்டது. ஏழைக்கு ஏழையாய் வறுமைவாய்ப்பட்டனர். அந்த நிலையிலும் செல்வமிருந்த பொழுது அவள் தன் கணவனை மலர்ந்த முகத்துடன் பேணியதுபோலவே இப்பொழுதும் சிரித்த முகத்துடன் அவன் முகம் வாடாமல் பழகுகிறாள்.

இதுதான் செல்வம் என்கிறது தொல்காப்பியம். திரு - என்பதற்குச் செல்வமுடைமை என்னாது, 'திருத்தகவிற்று ஆகியதோர் உள்ள நிகழ்ச்சி' எனப் பேராசிரியர் எழுதுவார். 'திரு' வுடையார் போன்ற மனமகிழ்ச்சி, புன்சிரிப்பு, மலர்ந்த முகத்துடன் காணப்படுதலே 'திரு'த் தகவிற்றாகிய மனவுணர்வு. அதற்குச் செல்வம் இருந்தால்தான் அது வருமென்பதில்லை. திருவுடையார் பலர் ஏழையினும் ஏழைகள் போல், அச் செல்வத்தினைக் காத்தலிலேயே இடர்ப்பட்டு முகமலர்ச்சியின்றி வாடித் திரிவதுண்டு.

இங்குக் கணவன் மனைவியரிடையே எஞ்ஞான்றும் திருவுடையார் போலும் மனமகிழ்ச்சியும் முகமலர்ச்சியும் திகழவேண்டும் என்பதே கருத்து.

மணமக்களிடையே பொருந்தாக் குணங்களைத் தொல்காப்பியர் அடுத்துக் கூறுவானேன்?

திருமணம் என்பது ஆயிரங் காலத்துப் பயிர். குடும்பம், குடி என்பனவே உலக மானுட வாழ்வின் ஆணிவேர். இக் குடும்பங்களின் வாயிலாகவே நல்ல குழந்தைகள் பிறந்து, சமுதாயம் என்பது தொடர்கிறது.

இன்றைய உலகம் பொருளாதாரத்தையே அளவுகோலாகக் கொள்கிறது. மிகக் கூடுதலான யந்திரக் கருவிகள் வழி வசதிமிக்க வாழ்வைப் பற்றிய நாட்டமே வளர்க்கப்படுகிறது. பண்பாடு, ஒழுக்கம் பற்றி எடுத்துரைக்க, நினைவூட்ட, வழிகாட்ட ஆளின்றி மானுட சமுதாயம் ஓடிக்கொண்டிருக்கிறது. எல்லோரும் நீண்ட கால வாழ்வை எண்ணிப் பாராமல், அன்று அன்று பெறும் இன்பச் சுக வாழ்வே முக்கியம் என்று எண்ணுகின்றனர்.

இதுகாறும் நம் முன்னோர்கள் பேணி வளர்த்த மரபுகளைக் கேலி கிண்டல் செய்து, அவற்றைத் தூக்கி எறியக் கதைகள் எழுதுகின்றனர்; படம் காட்டுகின்றனர். விலங்கு - மனிதன் - தெய்வம் - இவற்றுள் விலங்கு நிலையிலிருந்து வந்த மனிதன் தெய்வநிலைக்கு உயரவேண்டியே நம் முன்னோர் எழுத்திலும் பேச்சிலும் வழிகாட்டினர்.

கூட்டுக் குடும்பம் பற்றிப் பேச இன்று வாய்ப்பே இல்லை. கூத்தும் கும்மாளமும் சண்டையும் சச்சரவும் இருந்தாலும் ஒருவருக்கொருவர் துணை என்ற ஆழ் மனநிலை ஒன்றும் கூடவே இருந்தது. துன்பங்கள் மறக்கப்பட்டன. மறைவாக நடக்கும் ஒழுக்கக் கேடுகள் வெட்கமூட்டின.

இன்றைய 'உதிரிகள்' நிலைக்கும் தொல்காப்பியர் குறிப்பிடும் பொருந்தாக் குணங்களுக்கும் நிரம்பத் தொடர்புண்டு.

நிம்பிரி - அழுக்காறு, பொறாமை. கணவர் நல்ல நல்ல உடை முதலியன வாங்கிக்கொண்டு தன்னைப் புறக்கணிப்பதாக மனைவிக்கும் அதுபோல கணவனுக்கும் ஏற்படும் பொறாமை. இருவரையும் பிரித்து விடுவதாற்போலும் 'நிம்பிரி' என்ற அருஞ்சொல்லை ஆள்கின்றார்.

'கொடுமை' - இன்று செய்தித் தாள்களில் கணவன் தன் பெற்றோருடன் சேர்ந்துகொண்டு, வரதட்சிணைக்காக மனைவியைக் கொடுமைப் படுத்துவதும் அதனால் ஏற்படும் 'தற்கொலைகளும்' அவ்வப்போது வெளிவரும்போது 'கொடுமை' என எண்ணுவோமல்லவா? இது பிற நாடுகளில் நிரம்ப உளது. பெண் விடுதலை, மகளிர் சுதந்திரம் பற்றிப் பேசிவிட்டு, வெளிநாட்டிலும் செல்வத்திற்காகக் கணவன் மனைவியரிடையே நம்பிக்கையின்மை நிலவுவதை ஒப்பிட்டுணர வேண்டும்.

வியப்பு எனக் கணவனோ, மனைவியோ எந்த நேரமும் தன்னையே மிக வியந்து அடிக்கடி பேசுவது, "நான் எப்படிப்பட்ட வீட்டில் பிறந்து வளர்ந்தவள் தெரியுமா?" என்று கதை அளப்பவளைத் திருத்தவே முடியாது. 'வியவற்க எஞ்ஞான்றும் தன்னை' என்ற குறள், குடும்ப வாழ்விற்கும் பொருந்தும்.

புறமொழி - அடுத்த வீட்டு அம்மாவிடமும் உறவினரிடமும் தன் கணவனைப் பற்றிப் பல குறைகளைச் சொல்லும் வழக்கம் இன்றும் காணப்படுகிறது. புறஞ்சொல் பேசும் இது, குடும்ப ஒற்றுமையைப் பாதிக்கும். மேலும் யாரிடம் புறம் பேசினோமோ, அவராலேயே நாம் நகைப்பிற்கிடனாகவும் நேரும்.

வன்சொல் - கணவனை மனைவியும் மனைவியைக் கணவனும் மறந்தும் கடுஞ்சொற்களால் திட்டிப் பேசிவிடக் கூடாது. அது வடுப் போல நின்று வாழ்வை அழிக்கும்.

பொச்சாப்பு - தம்மைக் கடைப்பிடியாமை, சோர்வு என்பார் இளம்பூரணர். பேராசிரியர் கடைப்பிடியின்றி ஞெகிழ்ந்திருத்தல் என்பார். தன்னைத் தானே கட்டுப்படுத்திக் கொண்டு வாழ்தல் வேண்டும். அவ்வாறு வாழாது மறந்திருத்தல்; அலட்சியப் புத்தியால் கடமைகளை மறந்திருத்தல்.

பொச்சாவாமை - திருக்குறளில் வரும் ஓரதிகாரம். அதற்குப் பொதுவாக 'மறதி' என எழுதிவிடுவர். கடமை மறதியே பொச்சாத்தல். அரசியலில் கட்சிகள் தரும் தேர்தல் வாக்குறுதிகள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டு. மகிழ்ச்சியிலும் மிதப்பிலும் அரசியலார் கடவுளராகி மக்களுக்குச் செய்வதாகச் சொன்னவற்றை மறந்துவிடுவர். குடும்பத்திலும் பிள்ளைகளுக்கோ அல்லது கணவன் மனைவிக்கோ, அல்லது அவள் அவனுக்கோ செய்ய வேண்டியவற்றைச் சோர்ந்து மறந்துவிடுவது. பெரும்பாலும் இது அளவு கடந்த மகிழ்ச்சி, எதையும் அலட்சியமாக நினைப்பது, கடமையுணர்வின்மை, சோம்பலில் தோன்றும்.

மடிமை - குடும்ப வாழ்வில் சோம்பலால் பலர் ஏழைமைக்கு ஆளாகி அழிவர். எதையெடுத்தாலும் பிறகு, நாளைக்கு என ஒத்திப்போடும் கூட்டம் இது. குடிமை - தன் குடி மேலானது என நினைத்து நடத்தல்; ஒருவர் மற்றவர் பிறந்த குடியைத் தாழ்வாக நினைத்தல். இன்புறல் - இன்பமோ, துன்பமோ சமமாக நுகர வேண்டும். ஒருவர் மற்றவரினும் கூடுதலாக இன்புறுவதாக நினைத்துக்கொள்ளுதல். ஏழைமை - கூர்த்த அறிவில்லாத - புத்தியற்ற தன்மை. இது பணத்தால் வருவதன்று; அறியாமையால் வருவது.

மறப்பு - பொதுவாக எதனையும் மறந்துவிடுவது. வாங்கிய கடனை மறந்துவிடுவது. முன்பு திட்டமிட்டிருந்ததை மறந்துவிடுவது. வீட்டிற்கு மாலை நான்கு மணிக்கே வருவதாக உறுதியாகச் சொன்னவன் அதை மறந்துவிடுவது.

இதில் 'ஒப்புமை' என்பதே மிகவும் கெட்ட குணம். இதைத் தொல்காப்பியர் தம் நுண்மாண் நுழைபுலத்தால் கூறியுள்ளார். இதிலுள்ள உளவியலுண்மை, இந்த மானுடத்தை முழுவதும் அறிந்தவர்க்கே புலனாகும். ஒப்புமை - கணவன் தன் மனைவியை 'இன்னாளை ஒக்கும் இவளென்று' அன்பு செய்தல் எனப் பேராசிரியர் எழுதுகிறார்.

இளம்பூரணர், 'ஆணும் பெண்ணும் தாம் காதலிக்கப்பட்டாரைப் போல்வாரைக் கண்டவழி, அவர் போல்வார் என ஆண்டு நிகழும் உள்ள நிகழ்ச்சி' என்பார். மேலும் இது கீழ்மக்களிடம் நிகழும் என்பார். அதாவது தான் காதலித்தவள், திரைப்படத்தில் வரும் ஒருத்தியை போன்றவள் என எண்ணி அன்பு செய்தல் என்பது கருத்து.

பொதுவாக, காதலித்தபின் அல்லது திருமணமான பிறகு ஆடவன் தன்னவளை, வேறு பெண்களுடன் ஒப்பிட்டு எண்ணலாகாது. அவளும் தன் கணவனைப் பிற ஆடவருடன் ஒப்பிட்டு எண்ணலாகாது. இவ் உணர்வுகள் தவறான வழிக்கு இட்டுச் செல்லும். தனக்கு ஒருத்தி என அமைந்துவிட்டால், அவள்தான் தனக்கு எல்லாம் என எண்ண வேண்டும்.

❄ ❄ ❄

## கணியம்(சாதகம்) பார்க்கும் பழக்கம்

இன்று சாதகம் பார்க்கும் பழக்கம் மிகக் கூடிவிட்டது. முந்தைய காலத்தில் எல்லாம் இந்த நினைவு சிலரிடம் இருந்தது. அன்று சோடிப் பொருத்தம், குடும்பப் பொருத்தம், மனப் பொருத்தம் இருந்தால், வெளிப்படையாகத் தோன்றிய அளவில், பேசி முடித்து மணம் செய்துவிடுவர்.

குடும்பநிலை(அந்தஸ்து) என்று பணக்காரக் குடும்பங்கள் தங்களைப் போன்றவர்களையே - வசதியுள்ள இடமாகப் பார்த்து மணம் பேசினர். 'ஸ்டேட்டஸ்' என்று இதனை மட்டுமே கருதியதும் உண்டு. தங்களைவிட வசதி குறைந்தவர்கள், ஏழைகள் என்றால், பெண் எடுப்பதற்கோ, கொடுப்பதற்கோ மனம் ஒப்பமாட்டார்கள். இந்த நிலை இன்று மாறிவிட்டது. ஆனால் வேறு குறைகள் கூடிவிட்டன.

இன்று மணமுறிவுகள் மிகுதியாகிவிட்டன. இருவரும் வேலை பார்ப்பதால், ஒருவரையொருவர் ஐயப்படுகின்றனர். மணமுறிவு பெற்றவர்கள், தங்களைப்போல் மணமுறிவு பெற்றவர்களைத் தேடி மறுமணம் செய்கின்றனர்.

இன்று புள்ளிவிவரம் எடுத்தால், சாதகம் பார்த்துச் செய்ததிலும் மணமுறிவு, சிக்கல்கள் தோன்றுகின்றன. இன்னும் சொன்னால் இது அறிவுடையவர்களின் மூட நம்பிக்கையாகிவிட்டது.

திருமண விவரம் தரும் நிறுவனங்கள் நடத்துபவர்கள், இடைத்தரகு செய்பவர்கள் கூடிவிட்டனர். நாளிதழ், பிறஇதழ்கள் எல்லாம் 'இராசிபலன்' போடுவதும், அதில் மக்கள் முழு நம்பிக்கை வைப்பதும் வேடிக்கையாகவுளது.

சாதகம் பார்ப்பவர்கள் முன்பு வறுமையில் வாடினர். இன்று கோடி கோடியாகப் பணம் குவிக்கின்றனர். ஒருவர் சொல்வதற்கும் மற்றொருவர் சொல்வதற்கும் வேறுபாடு உளது. சாதகத்தை நம்பலாமா? கூடாதா? - என்று வழக்காடு மன்றமே வைக்கலாம்.

முதலில் தமிழர்கள், இந்த மூடநம்பிக்கைக்குத் தாமே ஆட்பட்டனரா? அல்லது புரோகிதப் பார்ப்பனியம் தமிழர்களை இதில் மூழ்கடிக்க வைத்துவிட்டதா?

மிகவும் தீர்க்கமாக எண்ணிப் பார்த்தால், தமிழர்களிடம் இருந்த இதனை, புரோகிதர்கள் பயன்படுத்திக் கொண்டனர் எனலாம்.

தமிழர்களிடமிருந்த பத்திமையுணர்வை, புரோகிதம் தனக்கு இலாபம் தரும் தொழிலாக மாற்றிக் கொண்டதுடன் இதை ஒப்பிடலாம்.

முக்காலமும் அறிந்து சொல்லும் 'அறிவர்களைப்' பற்றித் தொல்காப்பியத்தில் வருகிறது. இவர்கள் பருவ நிலைகள் பற்றியே அறிந்து, முன் கூட்டிக் கூறினர். தனிமனிதர்களின் எதிர்காலம் முதலியன பார்க்கும் பழக்கம் பற்றித் தொல்காப்பியத்தில் குறிப்பில்லை.

குடை நாட்கோள், வாள் நாட்கோள் என உழிஞைத் திணையில் வருவது, நல்லநாள் பார்க்கும் பழக்கத்தை நினைப்பூட்டுகிறது. போருக்குப் புறப்படும் முன் வேந்தன் நல்ல நாளில்தான், முதன்முதலில் வெண்கொற்றக் குடையையும் வாளையும் வெளியே, போரின் தொடக்கமாக அனுப்புகின்றான். 'நாளும் புள்ளும் பிறவற்றின் நிமித்தமும்' எனப் பாடாண்திணையில் கூறுவதால் நாள் என்ற நட்சத்திர நிலை, புள் - எனப் பறவை முதலியவற்றால் அறியும் 'சகுனம்' பார்த்தல், மேலும் பல நிமித்தங்கள் பார்ப்பது எல்லாம் இருந்துள.

சங்க இலக்கியத்தில் கணி - கணியன் பற்றி நிரம்ப வருகிறது. 'கணிவாய்ப் பல்லி' என்று பல்லி சொல்லும் பலன் கேட்டுள்ளனர். வேங்கை பூக்கும் காலம் நல்லநாள் என்று கருதி, அதை, 'கணி வேங்கை' என்றே அழைத்துள்ளனர். உன்னமரம்

வாடுவதும் தளிர்ப்பதும் கொண்டு குறிபார்த்துள்ளனர். பன்றி முதல் பறவைகள்வரை இவர்கள் குறிபார்த்துள்ளனர்.

விரிச்சி என்று நற்சொல் கேட்டல் (அசரீரி) நம்பப்பட்டது. கட்டுவிச்சியும், வேலனும் குறி சொல்வர். அவர்கள் எதிர்காலம் பற்றியும் பிறவாறும் குறிசொல்லியுள்ளனர்.

சாதகத்தைக் கணித்துக்கொடுங்கள் என்று இன்றும் கேட்கின்றனர். எனவே திருமணப் பொருத்தமும் பார்த்திருக்கக் கூடும். தொல்காப்பியர் பத்துவகைப் பொருத்தம் கூறுகிறார். சோதிடரும் பத்துவகைப் பொருத்தம் பற்றி விளக்குகின்றார். இதனால் நமக்குத் தமிழரிடம் இப் பழக்கம் முன்பே இருந்ததோ என்ற ஐயம் ஏற்படுகிறது.

முதலில் சோதிடர் கூறும் பத்துப் பொருத்தங்களைக் காண்போம். இது பிறந்த நாள் நட்சத்திரம் மற்றும் கிரக அமைப்பை வைத்துக் கணக்கிடப்படுகிறது. நட்சத்திரங்களை வைத்து உடனே கணக்கிட்டுவிடுவது தவறு. கிரக அமைப்பையும் சேர்த்தே பார்க்க வேண்டும்.

சில சமயம் இருவருக்கும் ஒரே நாள்மீனாக இருந்தால் என்ன செய்வது? அவ்வாறு வரும்போது ரோகிணி, திருவாதிரை, மகம், அஸ்தம், விசாகம், திருவோணம், உத்திரட்டாதி, ரேவதி ஆகியவை ஒரே நட்சத்திரமாவது உத்தமம்.

அசுபதி, கார்த்திகை, மிருகசீரிடம், புனர்பூசம், பூசம், உத்திரம், சித்திரை, அனுசம், பூராடம், உத்திராடம் ஆகியவை ஒன்றாக வந்தால் மத்திமம். மற்றவை கூடா. இது ஒருவர் கருத்து. மற்றொருவர் இவற்றின் வேறுபட்டவை வரலாம் என ஆங்கில ஏடு ஒன்றில் குறிப்பிட்டிருந்தார்.

எனக்குத் தெரிய பரணி, ஆயில்யம் போலும் ஒரே நாள்மீன்காரர்கள், மற்றவர்களைப் போலவே நன்கு வாழ்கிறார்கள்.

ஆயில்யத்தில் பிறந்தவரை மணம் முடித்தால் மாமியாருக்கு ஆகாது. மூல நாள்மீனில் பிறந்தவருக்கு முடித்தால் மாமனார் ‘போய்’ விடுவார். இது பொய்யாக்கப்பட்டு நல்வாழ்வு வாழ்பவர் பலருளர்.

## கணியம் விளக்கும் பத்துப் பொருத்தம்

இச் சாத்திரம் கடல்போல் விரித்துப் பேசப்படுகிறது. இதிலும் பல்வேறு கருத்துகள் உள. சோதிடர் யாரும் முற்றக் கற்றவரல்லர். இனிப் பத்துப் பொருத்தங்களைப் பார்ப்போம்.

### 1. தினப் பொருத்தம்

இது நட்சத்திரங்களை வைத்து எண்ணப்படுகிறது. பெண் பிறந்த நாள்மீன் முதலாக, மாப்பிள்ளை பிறந்த நாள்மீன் வரை எண்ணி, அதை ஒன்பதால் வகுப்பர். அதை வைத்துச் சோதிடர் பொருத்தம் பார்க்கிறார்.

### 2. கணப் பொருத்தம்

நட்சத்திரங்களிலேயே தேவ கணம், மனுச கணம், அரக்க கணம் என மூன்றுளதாம். ஒருவர் பிறந்த நட்சத்திரம் எந்தக் கணம் சார்ந்தது எனப் பட்டியலிடுகின்றனர்.

இருவரும் ஒரே கணத்தினர் என்றால் உத்தமம். தேவகணமும் மனுச கணமும் ஒத்துப் போகும். அரக்க கணம் மட்டும் கூடாது. எந்த நட்சத்திரம் எந்தக் கணம் என்பதைச் சோதிடரிடம் கேட்டறிக.

கார்த்திகை, ஆயில்யம், மகம் போல்வன பல அரக்க கணம் என்பது அதிர்ச்சி தருகிறது. எந்தக் கணத்தவரை, எந்தக் கணத்துடன் சேர்ப்பது நல்லது அல்லது கெட்டது என்பதைக் கணியர் கூறுகின்றார்.

### 3. மகேந்திரப் பொருத்தம்

இதுவும் நட்சத்திர அடிப்படையில் எண்ணிப் பொருத்தம் கூறப்படுகிறது. பெண்ணின் நட்சத்திரம் தொடங்கி, ஆணின் நட்சத்திரம்வரை எண்ணி, பலன் கூறுகின்றனர்.

### 4. ஸ்திரீ தீர்க்கம்

இதுவும் நட்சத்திர எண்ணிக்கையால் அமைகிறது. பெண்ணின் நாள்மீன் தொடங்கி எண்ணும்போது ஆணின் நட்சத்திரம் 13க்கு மேல் வந்தால் உத்தமமாம்.

## 5. யோனிப் பொருத்தம்

இது ஆண் பெண் உடலுறவு உறுப்பு. இது இருவரும் மனநிறைவோடு கூடி இன்பம் நுகர வைப்பது.

நட்சத்திரங்களை ஒவ்வொன்றும் இன்ன விலங்கென்று கூறுகிறார்கள்.

| | |
|---|---|
| பரணி | - ஆண் யானை |
| கார்த்திகை | - பெண் ஆடு |
| திருவாதிரை | - ஆண் நாய் |
| திருவோணம் | - பெண் குரங்கு |
| ரேவதி | - பெண் யானை |

இவ்வாறு 27 நாள்மீன்களும் விலங்குகளாகின்றன. இதில் இந்த விலங்கு இந்த நிலையினது - அதாவது தேவ கணம், மனுசகணம், விலங்குக் கணம். இவை எது எதற்குப் பொருந்துமெனச் சோதிடர் கூறுவர்.

## 6. இராசிப் பொருத்தம்

இராசி அடிப்படையில் பார்ப்பது. பெண்ணின் இராசியிலிருந்து எண்ணும்போது ஆணின் இராசி ஆறுக்கு மேலிருந்தால் உத்தமம்.

## 7. இராசி அதிபதிப் பொருத்தம்

ஒவ்வோர் இராசிக்கும் அதிபதி உண்டு. எதற்கு எது அதிபதி என்பது சோதிட நூலில் குறிக்கப்பட்டுள்ளது. அதிபதிகள் நட்பாக இருக்க வேண்டும்; பகையாக இருக்கக் கூடாது. எந்த இராசிக்கு எது நட்பு, சமம், பகை என்பதற்குச் சோதிடப் புத்தகத்தில் பட்டியலுளது.

## 8. வசியப் பொருத்தம்

இராசிகளிடையே வசியமிருப்பதாக அதாவது எதற்கு எது வசியம் என்று ஒரு பட்டியல் போட்டுள்ளார்கள். அவற்றின்படி இவை - ஆண் இராசியும் பெண் இராசியும் ஒன்றுக்கொன்று வசியமுடையதாக இருக்க வேண்டுமாம்.

## 9. மாங்கலியப் பொருத்தம்

இதை ரஜ்ஜூப் பொருத்தம் என்பார்கள். ஆண், பெண் நட்சத்திரங்கள் ஒரே ரஜ்ஜூவில் வரக்கூடாது; மாறி வந்தால் பொருத்தம்.

இதைச் சிரசு, கண்டம், வயிறு, தொடை, பாதம் என ஐந்தாகப் பகுத்து, ஒவ்வொன்றுக்கும் இன்ன இன்ன நட்சத்திரம் எனப் பட்டியலிட்டுள்ளார்கள். இதனை மிக முக்கியமான பொருத்தம் என்று கூறுவர்.

## 10. வேதைப் பொருத்தம்

ஆண், பெண் நட்சத்திரங்கள் ஒன்றுக்கொன்று முரணாக இருக்கக் கூடாது. முரண்பட்டவை பொருத்தமாகா; முரணாக இல்லாவிட்டால் உத்தமம்.

எந்த நட்சத்திரத்திற்கு எது வேதை அல்லது முரண் என்பதற்கு ஒரு பட்டியல் வைத்துள்ளனர். முடிவாக - கணம், யோனி, ரஜ்ஜூ(மாங்கலியம்) எனும் மூன்றே மிக முக்கியமான பொருத்தங்கள். இவை கட்டாயம் பார்க்க வேண்டியவை.

கணம் என்பது குலம், குடி என்பதுபோல் ஒலிக்கிறது. யோனி என்பது மணமக்களின் காமவாயில் பற்றியதே. பிற யாவும் நாள்மீன்கள், கோள்களின் அடிப்படையின. சோதிடர்கள் பலவாறு விவரிப்பர். ஒருவர் கூறுவது போல் மற்றொருவர் கூறுவார் என எதிர்பார்க்க இயலவில்லை.

## நம்பிக்கையும் அறிவியலும்

கணியம் - சோதிடம் ஓர் அறிவியல் - வானியல் சார்ந்ததாக இருப்பதால், மிக நன்கு கற்று அத் துறையில் வல்லுநரான ஒருவர், துல்லியமாகக் கணக்கிட்டுக் கூறிவிடுதல் கூடும். பரிபாடலில் கோள்களின் மூலம் மழைவரும் காலம் முதலியன முன்கூட்டி அறியப்பட்டுள்ளன. வெள்ளி என்னும் வெண்மீன் “திசைதிரிந்து தெற்கேகினும்” என்று கூறுவர். வெள்ளி மீன் வடக்கே சாய்வாக இருக்கும் போது மழை பெய்து வளம் பெருகுமாம்; தெற்கே சாய்ந்தால் மழை வராதாம். இதுபோன்ற வானியற் குறிப்புக்கள்

நிரம்பவுள. எனினும் தனிமனித வாழ்க்கையை, இதன் மூலம் கணிப்பது பற்றி எக் குறிப்பும் இல்லை.

சேரன் அரண்மனையில் இளங்கோவைப் பார்த்த ஒரு கணியன், இளங்கோவின் முகத்தைப் பார்த்ததுமே, 'அரைசு வீற்றிருக்கும் திருப் பொறி உண்டு' என்று கூறுகிறான். இதனால் துறவு பூண்ட இளங்கோ, 'அந்தமில் இன்பத்து அரசாள் வேந்தாக' ஆயினன் என, தெய்வமான நிலையில் இருந்த கண்ணகி கூறுகிறாள்.

ஒருவரது எதிர்காலத்தை அவரே கணித்தறிதல் கூடும்; அல்லது அவரது முகம் தோற்றத்தை வைத்து ஒருவர் சொல்லுதல் கூடும். பிறந்த நேரத்தை வைத்துக் கணிப்பதில் சில நன்மைகளும் பல தீமைகளும் விளைகின்றன. வாழ்க்கை என்பது இன்பதுன்பம் நிறைந்ததுதான். இவற்றை எல்லாம் கணியர் சொல்லித்தான் தெரிய வேண்டுமென்பதில்லை.

அண்மையில் நடந்த நிகழ்ச்சி ஒன்று நினைவு கூரத்தக்கது. என் நண்பர் நாடிசோதிடம் பார்த்துள்ளார். ஏடு படித்த அவன் கூறியன பல சரியாக இருந்தன. மேலும் அவர் அவரது எழுபத்தைந்தாம் வயதில், இன்ன மாதம், நாளில் காலமாவார் என்றும் கூறிவிட்டான்.

அவன் கூறியன பல நடந்ததால் இதுவும் நடக்குமென அவர் நம்பி விட்டார். செல்வராகிய அவர் தம் சொத்துக்களை எல்லாம் பகிர்ந்து பதிவுசெய்து 'உயில்' எழுதிவைத்துவிட்டார். ஒருநாள் என்னிடம் வந்து இவ்வுண்மையைக் கூறினார். "என் மனைவியிடம் கூடக் கூறவில்லை. அவன் சொன்னவை பலவும் நடப்பதால் இதுவும் நடக்கும்தானே" என வினவினார்.

நான் "இது தங்களைப் பற்றிய நாடி சோதிடம். ஆனால் உங்கள் மனைவியின் ஏட்டில் 'மாங்கல்ய பலம்' கூடுதலாக இருந்து தங்கள் முடிவு தள்ளிவைக்கப்படலாம். பிள்ளைகள் சாதகமும் பார்க்க வேண்டும். இந்த ஒரு செய்தியில் பலரது சாதகப் பலன்கள் குறுக்கிடலாம். எனவே, கணியன் சொன்னது நடவாமற்போக நிரம்ப வாய்ப்புள்ளது" என்றேன். அதுபோல் அந்த முடிவு எதுவும் நடக்கவில்லை. அவர் நன்றாகவே இருந்தார். பின்னர் அவர் சாதகத்தைப் பார்த்த பலர், அவர் 86 அகவை வரை

வாழ்வார் என்று கூறினர். அதையும் அவர் முழுமையாக நம்பிவிட்டார். ஆனால் எதிர்பாராது தமது எண்பதாம் வயதில் காலமாகிவிட்டார்.

நம் வாழ்வு ஓடும் நீரோடை போன்றது. மேடு பள்ளங்கள் தடைப்படுத்த முயலலாம்; வெள்ளம் வரலாம்; வறட்சி ஏற்படலாம். "ஆர் உயிர் ஏதோ ஒரு முறைவழிப்படும். இதில் முன் கூட்டி அறிய சாதகம் பார்ப்பது, அச்சத்தாலும் ஆசையாலும் ஆகும். அவை தேவையில்லை. நாமே நம் வாழ்வைக் கணித்துக் கொள்ளும் அளவு நம்மிடம் துணிவுண்டு; திறமையுண்டு; தன்னம்பிக்கையுண்டு. இத்தகையவனை, கிரகங்கள் எதுவும் செய்ய இயலாது.

கோள்கள் - கிரகங்கள் அவற்றின் போக்கில் இயங்குபவை. மனித வாழ்வைச் சோதிப்பதோ, பாதிப்பதோ அவற்றின் வேலையன்று. சூரியன் சாய்கின்றான் எனில், அது அவனது இயல்புப்போக்கு. வெயில் அதிகம் தாக்காது நம்மை நாம் காத்துக் கொள்வது நம் முயற்சியைப் பொறுத்தது.

எழுபத்தைந்து விழுக்காடு நம் முயற்சிகளைப் பொறுத்தது, எஞ்சிய பகுதியை வேண்டுமானால் பிற பாதிக்கலாம்.

என்னைக் கேட்டால் எதிர்காலத்தை உருவாக்குவதில் பெரும்பங்கு நம் கையில்தான் உள்ளது. 'அவனருளாலே அவன் தாள் வணங்கி' என்பது போல், முயற்சிக்குரிய அனைத்தையும் இறைவன் நமக்கு அருளியுள்ளார். நாமே முயல்வதென்பதும் அதன் பயனேயாகும்.

என் நண்பர், அனுபவத்தால் சாதகம் பார்ப்பார். மற்றவர்களின் எதிர்காலத்தை, எவ்வித எதிர்பார்ப்புமின்றிக் கணித்துச் சொல்வார். அவரது சொந்த வாழ்வில், 'ஏன், இப்படி எவ்வித முயற்சியுமின்றி இருக்கிறீர்கள். இரண்டு பெண்கள் திருமணத்திற்கு ஆயத்தமாக நிற்கிறார்களே' என்றால், இந்தச் சனிதிசை முடிய வேண்டும். இன்னும் ஏழெட்டு மாதங்கள் உள்ளன. பிறகு முயற்சி எடுத்தால் போதும் என்பார். உண்மையாக இன்றிலிருந்து, துன்பப்பட்டு உழைத்தபடி இருந்தால்தானே, சனி கழிந்ததும் காரியம் நிறைவேறும். அல்லாமல் அதுவரை சோம்பியிருந்துவிட்டு, பிறகு சனி கழிந்ததும்

திடீரென்று நன்மை எங்கிருந்து வரும்? இப்படியே அவர் தம் சொந்த வாழ்வில் பெரும்பகுதியை வீணே கழித்துவிட்டார்.

நாம் எதிர்பாராத நிலையில் நமக்கு இடர் வரும்போது கடவுளைக் கூப்பிடுகிறோம். சாதகம் பார்க்க ஓடுகிறோம். நல்ல இடமென்று விசாரித்து, திருமணம் செய்த வீட்டில் மறுநாளே பிரச்சினைகள் என்றால், நாமும் 'ஐயோ! இப்படி எதிர்பாராது வருகிறதே நாம் எச்சரிக்கையாக இருந்து, தேடித் தேடி நல்லது என்று ஈடுபட்டாலும் அப்போதும் இடர்ப்பாடு குறுக்கிடுகிறதே' என மிகவும் பதறுகிறோம். இந்த அச்சம் காரணமாகவே எடுத்ததற்கெல்லாம் சாதகம் பார்த்தல். குறிபார்த்தல் என்று பலவாறு அல்லற் படுகிறோம். உண்மை இதுதான்.

வாழ்விலேற்படும் அச்சமே மூடநம்பிக்கைகளுக்கு ஈர்த்துச் செல்கிறது. இன்று திரைப்படக் கதைகளாலும் வீட்டுக்குள் வரும் தொலைக் காட்சி நாடகங்களாலும் சமுதாயம் ஒட்டுமொத்தமாகச் சீரழிந்து வருகிறது. கட்டுப்பாடற்ற காளைமாடுகளாக, இன்றைய இளைஞர் கூட்டம் மாறிவருகிறது.

வழியில் போகும் பெண்களை வம்பிழுக்கும் நகைச்சுவைக் காட்சிகள் எத்தனை? இக் காட்சிகளைக் காட்டிப் பணம் குவிப்பவர்களுக்கும் மனைவி, சகோதரிகள், பேர்த்திகள் என இருக்கமாட்டார்களா?

சாதகம் பார்ப்பது அவரவர் விருப்பம், ஆனாலும் தொல்காப்பியர் குறிப்படும் பொருத்தங்களும் ஆகாக் குணங்களும் கதைகளாக - நாடகங்களாக எழுதி, படமாக்கி மக்களுக்குக் காட்டப்பட வேண்டும்.

முற்காலத்தில் இப் பொருத்தங்கள் பெரிதும் இல்லாத திருமணங்கள் நடந்துவிடும். அப்படி நடந்து விட்டாலும் கடைசிவரை, ஏதேனும் ஒரு வகையில் ஒத்துப்போகவே முயல்வார்கள், உடனே வெட்டிக் கொள்வது, விலக்கிக் கொள்வது என முயல மாட்டார்கள்.

❄ ❄ ❄

## மனப்பொருத்தமும் கட்டுப்பாடும்

எனக்குத் தெரிய ஒரு பெரிய செல்வர்க்கு, மற்றொரு செல்வக் குடும்பத்தார், அழகுள்ள தங்கையைப் பெண் என்று காட்டி, மணவறையில் சிறிதும் அழகற்ற அப்பெண்ணின் தமக்கையை உட்காரவைத்து விட்டார்கள். அந்த மணமகன் அழகானவர். அவர் எழுந்து ஓடவில்லை. திருமணம் நடந்தது. சிலநாள் கசப்பாக இருந்து பிறகு ஆண் ஒன்று, பெண் ஒன்று அழகிய குழந்தைகளைப் பெற்றார்கள். கடைசிவரை பிரியவே இல்லை. இன்று இதுபோல் நடக்குமா?

திருவள்ளுவர் மனப்பொருத்தம் ஒன்றையே திரும்பத் திரும்ப வற்புறுத்துகிறார்.

தாம்வீழ்வார் தம்வீழப் பெற்றவர் பெற்றாரே
காமத்துக் காழில் கனி (குறள். 1191)

தாம் விரும்பியவரே தம்மை விரும்பப் பெற்றால், அது உள் விதையில்லாத முழுமையான கனி தரும் சுவையைத் தருமாம்.

நாடாது நட்டலில் கேடில்லை, நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள். 791)

என்று திருவள்ளுவர் சொன்னது காதலுக்கும் திருமணத்திற்கும் பொருந்தும். தமிழர் பண்பாடு இரண்டாயிரம் ஆண்டுகளாக இதில் உறுதியாக இருந்துவருவது வியப்பளிப்பதாகும்.

சரக்குப் பேருந்து ஒன்றின் பின்புறத்தில் 'தொடர்ந்து வா! தொட்டுவிடாதே!' என எழுதியிருந்தனர். காதலர்களும் ஓராண்டளவேனும் இங்ஙனம் தொட்டுக் கெட்டு முட்டி தூக்கிவிடாது பேச்சுடன் நிறுத்திக் கொள்ள வேண்டும். ஓராண்டு முடியுமட்டும் உள்ளம் மாறாதிருந்தால் திருமணம் செய்துகொள்ளலாம்.

திருமணப் பொருத்தம் என்பது எவ் வகையிலும் நூற்றுக்கு நூறு அமைந்துவிடாது. குறை பொறுத்தல், விட்டுக்கொடுத்தல், பொறுமை போன்ற பலவற்றால் ஒருவரை ஒருவர் 'அனுசரித்துப்' போக வேண்டும். சங்க காலத்திலும் இன்று போல் குறைகள் பல இருந்தன. ஆயினும் புலவர்கள் சிறந்த குடும்பங்களையும் பண்புமிக்க காதலர்களையுமே நமக்குக் காட்டுகின்றனர்.

தலைவனது குறையைப் பொறுத்துக்கொண்ட ஒரு தலைவி, தன் தோழியிடம் சொல்வது இது.

**பூக்கமழ் பொதும்பில் சேக்கும் துறைவனொடு**
**யாத்தேம் யாத்தன்று நட்பே**
**அவிழ்த்தற்கு அரிதது முடிந்தமைந் தன்றே** (குறு. 313)

திருமணமானபின் அதிலிருந்து விடுபடுவதென்ற பேச்சுக்கே இடமில்லை. அது முடிந்துபோன ஒன்று என்று தலைவி கூறும் உறுதிப்பாடு, நிச்சயம் வேண்டும். எத்தனைமுறை மாறி மாறித் திருமணம் செய்துகொண்டே போனாலும், நிறைகள் மட்டுமன்றி குறைகளும் தொடரவே செய்யும். ஆடு வாய்வைப்பது போல், ஒன்றுக்கு மேற்பட்ட பல திருமணம் செய்வதைவிட, ஒருவனுக்கு ஒருத்தி என்ற கோட்பாட்டை நிலைநிறுத்தும் பண்பாடே சிறந்தது.

**சாதல் அஞ்சேன், அஞ்சுவல்**
**பிறப்புப் பிறிதாகுவ தாயின்**
**மறக்குவென் கொல்என் காதலன் எனவே**

இவ்வாறு, பொறுமையுள்ள பெண்ணையும், தவறு - குறை சில உடையனாயினும் வெட்கப்பட்டுத் தலைகுனிந்து நிற்கும் ஆணையும் பல பாடல்கள் புனைகின்றன.

தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ள பொருத்தங்கள், சங்க காலத்திற்கு முன்பிருந்தே - கட்டுக்கோப்பான குடும்ப வாழ்வு முறை தழைத்திருந்ததைக் காட்டுகின்றன. திருக்குறளில் காணும் குடியியல் இதன் விரிவுரை போல உள்ளது.

மேலை நாட்டு நாகரிகத் தாக்கத்தால், பெண்ணடிமை முதலான கேடுகளை விரித்துப் பேசும் புதுமைப் புரட்சியிடையே குறைகளை மட்டும் களைவோம்! குடும்பக் கட்டுக்கோப்பைக் காப்போம்!

❄ ❄ ❄

## சங்ககாலத் தமிழகம்

எந்த ஓர் இலக்கியத்தையும் அது தோன்றிய காலம், இடம், சூழல் ஆகிய பின்புலத்தில் வைத்துத்தான் மதிப்பிட வேண்டும். சிலர் சங்க கால இலக்கியத்தை இக் காலக் கண்ணோட்டத்துடன் அணுகுவர். பின்னர் பழங்காலம் பற்றிய தெளிவு இன்மையால் கண்டவாறு போற்றுவர் அல்லது தூற்றுவர்.

சங்க காலம் எங்கு நோக்கினும் காடுகள் அடர்ந்து படர்ந்து கிடந்த நிலப் பரப்பு; மக்கள் தொகை குறைவு; ஆடு மாடு யானை புலி போலும் விலங்குகளுடனும் பறவைகளுடனும் மக்கள் நெருங்கிப் பழகி, உறவு கொண்டாடுவது போல ஒட்டி வாழ்ந்த காலம்.

மக்கள் உடல் தோற்றம், வலிமையில் இன்றுள்ள மாந்தரினத்தைவிட மும்மடங்குக்குமேல் பெரியராய்த் திகழ்ந்தனர். கோயில் சிற்பங்களில், மிக உயரமாய், பருமனாய்க் காணப்படும் சிற்பங்கள் அவர்களை நினைப்பூட்டுவன. பேராசிரியர் அன்று இருபாலர்க்கும் வயது ஒப்புமை பற்றி விளக்கும்போது, 'பன்னிரண்டு யாண்டும் பதினாறு யாண்டும் பெண்மையும் ஆண்மையும் பிறக்குமென்பது ஒத்தினுள் (நூல்களுள்) ஒப்ப முடிந்தமையின்' என்பார். காரணம் அவ் வயதிலேயே அவர்கள் பருவம் எய்திவிட்ட நிலையேயாகும். திருமணம் செய்விக்குமளவு அவர்கள் வளர்ச்சி பெற்றுவிட்ட காலம் அது.

சங்க காலம் முதல் இன்றுவரை மூன்று மரபுகள் மாறாது போற்றப்பட்டு வருகின்றன.

(1) ஒரு பெண்ணை ஒருவன் உடலைத் தொட்டுவிட்டால், பிறகு அவனே அவளுக்கு உரியவன் என உறுதிப்பட எண்ணுதல்; மாறி ஒருவனை மணக்க இசைவதில்லை.

கம்பர் இராவணன் சீதையை, அவள் இருந்த பசுமைக் குடிலோடு - பர்ணக சாலை - பெயர்த்து எடுத்துத் தூக்கிச் சென்றான் என்று புனைவதை எண்ணிப் பாருங்கள். அசோகவனத்தில் சீதையைக் கண்ட அனுமன், அவளைத் தன் தோளில் தூக்கிச் செல்வதாகக் கூறியபொழுது, அவள் அதை மறுத்து மொழிந்தவற்றையும் சிந்தித்துப் பாருங்கள். உலகில் ஆயிரம் விதமாக நடப்பனவுள. எனினும் இத்தனை சிதைவுகள், மாற்றங்களிடையே இம் மனவுணர்வு அழுத்தமாக மக்களிடையே ஊன்றி இருந்ததை அறிதல் வேண்டும்.

(2) ஒரு குடும்பப் பெண், கணவனை இழந்தால் மறுமணம் செய்துகொள்வதில்லை. இதைப் போல்வன ஆணாதிக்க சமுதாயக் கொடுமை; பெண்ணடிமைத்தனத்தின் சின்னம் என்பர். ஓர் ஆடவனுக்குப் பலதாரமணம், பரத்தமை எல்லாம் உளதாகப் புனையும் இலக்கியம், ஒரு பெண் தன் கணவனை விட்டுப்பிரிந்து பிறன் ஒருவனை, ஏதேனும் ஒரு காரணத்தால் மணந்தாள் எனப் புனையவே இல்லை. 'வான் தரு கற்பினாள்' என்று, கற்புடைமையை அவளுக்கு மட்டுமே உரித்தாக்கின. ஆயினும் இம் மரபு இன்று இல்லை. இம் மனப்பான்மை சார்ந்த வாழ்வு பற்றிய பெருமிதமான சிந்தனைமட்டும் இன்றும் உளது.

(3) பொருள் தேடுதல் என்பது ஆடவர் கடமை; குடும்பப் பொறுப்பு மகளிர் கடமை என்ற மரபும் இன்றுவரை நிலவுகிறது. 'வினை ஆடவர்க்கு உரியதென்றும், மனையுறை மகளிர்க்குக் குடும்பக் கடமை உரியதென்றும்' சங்கப் புலவர்கள் பாடியுள்ளனர்.

## சிற்றுயிர்கள் கற்றுத் தந்த பாடம்

விலங்கினங்களுடன் தாமும் ஒருவகை ஐயறிவு இனமாக விளங்கி, மாந்தன் ஆறாவதறிவு வளர்ந்து, நாகரிகம் நோக்கி முன்னேறிக் கொண்டிருந்த காலம். சில நூற்றாண்டுகள் கழிந்த பின்னரும் மாந்தரிடம் பழைய விலங்கினப் பண்புகள் முற்றிலும் நீங்கிவிடவில்லை. இத்தகைய சூழலில் மக்களிடம் மேலே கூறிய

மரபுகள் எங்ஙனம் வேரூன்றின என்பது வியப்பாகவே உளது. உழுதுண்டு வாழத் தலைப்பட்டு விட்டனர். உணவு, உடை, வாழிடம் இவற்றில் மேம்பட்டு விட்டனர். இந் நிலையில் இயற்கைச் சூழலுக்கிடையில் இவர்கள் சிறுபான்மையினராக இருந்த போது, வீட்டுப் பயன்பாட்டு விலங்குகளும், அன்பு பாராட்டும் சிற்றுயிர்களும் சூழவே வாழ்ந்தனர். அவற்றுள் கிளி, புறா, ஆடு, மாடு, யானை, மான் என இவ்வாறு 'குடும்பமாக வாழும்' இயல்புடைய சிற்றுயிர்களிடம் பழகிப் பழகி, அவற்றின் பழக்க வழக்கங்களையும் தம்மை அறியாது கற்றுக் கொண்டனர். கொடிய விலங்குகளிடம் தீய குணங்களைக் கண்டு பழகியது போலவே, நல்ல சிற்றுயிர்களின் நற்பண்புகளும் தம் மனத்திலும் வாழ்விலும் படியப் பெற்றனர்.

அன்று அரிதாக விளங்கிய பறவைகளில் ஒன்று அன்றில். அவை சோடி சோடியாகவே வாழும் இயல்பின. ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாது. பிரிந்தால் உயிர் வாழாது. 'ஒன்றில் காலை அன்றில் போல' என்பர். அன்றிலைப் பற்றிக் கபிலரே சிறப்பாகப் பாடுகிறார். அவர் பறம்பு மலையில் பறவைகளுடன் நெருங்கிப் பழகியவர். அவர் அகநானூற்றில், ஒரு பாடலில், தோழி தலைவனிடம், 'விரைவில் திருமணம் செய்துகொள்; பெற்றோர் கண்டிப்பாக உள்ளனர்' என்று கூறுவதாகப் புனைந்துள்ளார். அப்போது தோழி உயிர் ஒன்றிய நட்புப் பற்றி இவ்வாறு கூறுகிறாள்.

**யாமே பிரிவு இன்று இயைந்த துவரா நட்பின்**
**இருதலைப் புள்ளின் ஓர் உயிரம்மே** (அகம். 12)

இருதலைப் புள் என்பது அன்றில். எப்பொழுதும் ஒன்றன் தலை மற்றதன் கழுத்துடன் சேர்ந்து கிடப்பதால், அது இரண்டுதலையுடைய ஒரே பறவைபோலக் காணப்படுமாம். அதனால் 'இருதலைப் புள்' என்றே பட்டம் சூட்டுகிறார் கபிலர். 'பிரிவே இல்லாது இணைந்த, சற்றும் சலிப்படையாத நட்பு' என்று கூறுகிறார். இரண்டு உடலாகக் காணப்படினும் அவை ஒருயிர் உடையனபோல வாழும். 'நாங்களும் அத்தகைய காதலுடையேம். எனவே, இனியும் களவை நீட்டிக்காமல் மணந்துகொள்' என்று தோழி, தலைவனிடம் வற்புறுத்துகிறாள்.

பாணனிடமும் இதே கருத்துப்படத் தோழி கூறுவதாகக் கருவூர்ப் பூதஞ்சாத்தனார் பாடுகிறார்.

...... ...... ...... எல்லி
**மனைசேர் பெண்ணை மடிவாய் அன்றில்**
**துணைஒன்று பிரியினும் துஞ்சா காண்** (அகம். 50)

'இரவில் வீட்டருகேயுள்ள பனை மரத்தில் கூடு கட்டி உறையும் வளைந்த அலகையுடைய அன்றில், துணை இரண்டில் ஒன்று பிரிந்தாலும் தான் உயிருடனிராது' என்று சொல்லித் தலைவி, கண்ணீர் சிந்தி வருந்துகிறாள். இதைத் தோழி பாணனிடம் கூறி, தலைவனுக்கு அறிவிக்கிறாள். 'பனை மிசை அன்றில் சேக்கும் முன்றில்' (அகம் - 360) என இவ்வாறு மிகப் பல பாடல்களில் இடம்பெறும் அன்றில், மனித வாழ்வில் அன்பை, இணை விழைச்சை, காதலைத் தூண்டுவதாக இருந்துளது. 'ஈருடல் ஒருயிராக' வாழும் இயல்பை அது மானுடத்தின் மனத்தில் விளைவித்திருக்கும் என எண்ண இடமுளது.

சங்கப் பாடல்களில் யானைகள்பற்றி வரும் செய்திகள் அனைத்தையும் தொகுத்து நோக்கினால், மனிதர்களுக்கு அடுத்தபடியாகக் 'குடும்பம்' என்ற அமைப்புடன் வாழ்வன அவையே என்பது நன்கு விளங்கும். 'ஒருத்தல்' என்பது, குடும்பத் தலைமைக்குரிய ஆண்யானை. அதனுடைய பெண் யானை 'பிடி' மென்மையுடையது. அவை ஈன்ற குட்டிகள் அவற்றைவிட்டு நீங்கா. இவ் யானைக் குடும்பத்தில் ஒன்றனுக்குத் துன்பம் என்றால், மற்றவை அதற்கு உதவும். ஓர் யாற்றைக் கடப்பதானால், முதலில் ஒருத்தல் யானை, அதனுள் சென்று, தண்ணீரின் ஈர்ப்பளவை அறிந்து திரும்பி, பிறகு தன் குடும்பத்துடன் ஆற்றைக் கடந்து செல்லும்.

காட்டூர்கிழார் மகனார் கண்ணனார், இத்தகைய காட்சி ஒன்றைப் படப் பதிவு செய்துள்ளார்.

...... ...... ....சாரல்
**ஈன்றுநாள் உலந்த மெல்நடை மடப்பிடி**
**கன்றுபசி களைஇய பைங்கண் யானை**
**முற்றா மூங்கில் முளைதருபு ஊட்டும்**
**வென்வேல் திரையன் வேங்கட நெடுவரை** (அகம். 85)

கன்று ஈன்றதால் வலிமை இழந்த பெண்யானையும் அதன் கன்றும் பசிக்கு என்ன செய்வது? அன்புள்ளம் கொண்ட ஆண்யானை மூங்கிலின் முற்றாத இளங்குருத்தை ஒடித்து வந்து ஊட்டுகிறது. வேங்கட மலை யானைகளின் வாழ்வுநிலை இது.

மோசிகீரனார் அகநானூற்றில் பாடிய ஒரு பாடலில் யானைகளின் உள்ளன்பை விளக்கும் செய்தி ஒன்று உளது. ஆண்யானை தன் பிடியாகிய பெண்யானையைப் பறிகொடுத்த வருத்தத்தில் தன் உணவாகிய 'குளகு' என்னும் தழையுணவை உண்ணாமல் வாடி வருந்தி நின்றதாம். பிரிவால் தலைவி மெலிந்ததை விளக்க வந்த உவமை இது,

தாழ்பெருந் தடக்கை தலைஇய, கானத்து
வீழ்பிடி கெடுத்த வெண்கோட்டு யானை
உண்குளகு மறுத்த உயக்கத் தன்ன
பண்புடை யாக்கைச் சிதைவு... (அகம். 392)

கீழே தொங்கும் அகன்ற பெரிய கையையுடைய யானை, தான் விரும்பிப் போற்றிய தனது பிடி - பெண்யானையை, யாரோ அம்பெறிந்து கொன்றதால் பறிகொடுத்துவிட்டது. அதனால் வெண்மைநிறக் கொம்பினை (தந்தத்தை) உடைய அந்த ஆண்யானை, வழக்கமாக உண்ணும் குளகினை உண்ணாமல் வருந்தி வாடிப்போனது. அதுபோன்று பண்புடைய தலைவி தன் உடம்பு சிதைவுற்று வாடினாள்.

மனிதர்களில்கூட கணவனை இழந்த மகளிர் வருந்துவதையே இவ்வாறு கவிஞர்கள் பெரிதும் புனைவர். இங்குத் தன் பெண்யானை இறந்ததற்குக் களிறு வருந்தி, உணவுண்ணாமல், மயங்கி வருந்திக் கிடப்பது, அதன் பாசத்தைப் புலப்படுத்துகிறது.

சங்க இலக்கியத்தில் இத்தகைய விலங்கு, பறவை பற்றிய காட்சிகள் பல நூற்றுக்கணக்கில் உள. மான், புறா, யானை, குரங்கு, அன்றில் என இத்தகைய காதலும் குடும்ப உறவுணர்வும் உள்ளவை யாவும் அவற்றின் பிறவி இயல்புகள். யாரும் கற்றுக் கொடுத்தவை அல்ல.

மாந்தர்களைப் பார்த்து அவை கற்றுக் கொண்டன எனக் கூறவும் இயலாது. மனிதர்களே அவற்றுடன் பழகி, இந்த

நற்பழக்கங்களைக் கற்றுக் கொண்டனர் எனலாம். இது புதுமையாய்த் தோன்றினும், விலங்குநிலை மாறி, ஐயறிவின் மேம்பட்டு, மனிதநிலைக்கான வளர்ச்சி ஏற்பட்ட பொழுது, அவ் விலங்கினம் சார்ந்த நல்லனவும் தீயனவும் தொடர்ந்தன என்றால் தவறில்லை. மாந்தர் அந் நல்லனவற்றை வளர்த்துக் கொண்டனர். தீயனவற்றைத் திருத்திக்கொண்டனர்.

**சிக்கல்களும் தீர்வுகளும்**

பத்துப் பொருத்தம் சொன்ன தொல்காப்பியர், அடுத்த நூற்பாவிலேயே ஆகாக் குணங்களை அடுக்கிக் கூறுவதேன்? அவர் ஒரு சிறுகதை அல்லது புதின ஆசிரியராய் எழுதியிருந்தால் தெளிவாக இருந்திருக்கும். ஆனால் அக் காலச் சூழல் எதனையும் பாட்டு வடிவில் எழுதுவதாக அமைந்து போனது.

ஒரு பெண் ஏழ்மை காரணமாக, ஒத்தவயதினளாகாமல், சில காலம் சென்று மணம் முடிக்க நேரலாம். செல்வக் குடியில் பிறந்து வளர்ந்தவள் காதல் வயப்பட்டுத் திருமணம் செய்து கொண்டவள், சில மாதங்களிலேயே வசதிக் குறைவுகளை எண்ணிப் பொறுமை இழந்து நடந்து கொள்ளலாம். நான்கு அண்ணன் தம்பியரில் ஒருவன் நன்கு படித்து, பெரிய வேலை பெற்று, செல்வாக்குடன் வாழ, மற்றவர்களின் மனைவிமார்கள் பொறாமைப்பட்டுக் குடும்ப நிம்மதியைச் சீர்குலைக்கலாம்.

அடுத்த வீட்டுடன் தங்கள் நிலையை ஒப்பிட்டு, ஒருத்தி தன் கணவனை எந்த நேரமும் தொந்தரை செய்யலாம்.

ஐயர் சொன்ன பத்துப் பொருத்தமும் இருந்தாலும் அறிஞர் சொன்னவையும் அமைந்திருந்தாலும் அன்றாட நடைமுறை வாழ்வில் அவை யாவும் அவ்வாறே அமைவதில்லை. வாழ்க்கை என்பது பலருடன் கூடி வாழ்வது.

நாம் நெறிப்படி வண்டி ஓட்டிச்சென்றாலும் எதிரே வருபவன் தவறுபட ஓட்டி, நம்மீது மோதி, விபத்தை விளைவிக்கலாம்.

எனவேதான் காதல் - குடும்பம் என அமையும் இல்லற நெறியில், தற்கட்டுப்பாட்டை மிகவும் வற்புறுத்தினர்.

'பொச்சாப்பு' என்பதற்குத் தம்மைக் கடைப்பிடியாமை, கடைப்பிடி இன்றி நெகிழ்ந்திருத்தல் என உரை எழுதியுள்ளனர். இது ஒரு வகையில் தற்கட்டுப்பாட்டை இழந்த நிலையைக் குறிக்கிறது எனலாம்.

விட்டுக்கொடுத்தல், ஒத்துப்போதல், பொறுமை காத்தல் - இம் மூன்றையும் நம் முன்னோர் இளமை முதலே கற்பித்தனர்.

பெண்ணடிமை, பெண் விடுதலைபற்றி இங்குத் தவறுபட எண்ணவில்லை.

யார் விட்டுக் கொடுப்பது, யார் ஒத்துப்போவது, யார் பொறுமை காப்பது என்பதே ஒரு சிக்கல்தான். இதில் ஆடவர்கள் தப்பித்துக் கொண்டு, பெண்களே அனைத்துத் துன்பங்களையும் தாங்குவது என்ற நிலை உலகியலில் காணப்படுகிறது. இதனை மாற்றியாக வேண்டும். ஆண், பெண் சமத்துவம் பேணப்பட வேண்டும்.

நம் இலக்கியங்களின்வழி அறியும் நமது பழங்காலச் சமுதாயம் பெண்ணையே 'சுமைதாங்கி'யாகக் காட்டுகிறது.

கத்திமுனையில் சிந்திப்பதுபோல் கூர்மையாக எண்ணினால், உண்மையான - உயிருக்குயிரான - மாற்றமறியாத காதலர்கள் தம்மிடையே ஏற்படும் இச் சிக்கல்களைப் பொருட்படுத்துவதில்லை. சிலர் 'குடும்பக் கட்டமைப்பு' சிதையாமலிருக்க, இவற்றில் தியாக மனப்பான்மையுடன் நடக்க ஆயத்தமாயுள்ளனர்.

திருமணம் என்பதே பெண்ணைச் சிறைப்படுத்தும் ஒரு தந்திரநெறி. குடும்பம் என்பது பெண்களைப் பூட்டி வைக்கும் சிறைச்சாலை. ஒருவனுக்கு ஒருத்தி என்பதே, சொத்துரிமையை வழிவழியாகக் காத்துக்கொள்ளச் செய்துகொள்ளும் அடிப்படையினால் வந்ததுதான். இதுபோன்று இன்று கூறப்படும் புரட்சிக் கருத்துக்கள் ஒரு புறம் பரவி வருகின்றன. இவ் விவாதத்தில் தவறில்லை என்றாலும், நிலைபெற்ற உலக வாழ்வை மையமாக வைத்து, இருபாற் கருத்துக்களையும் ஆராய வேண்டும்.

## இயற்கை கற்பிக்கும் பாடம்

பெண் மென்மையாகப் படைக்கப்பட்டுள்ளாள். அவள் மகப்பேற்றுக்கு உரியவளாகிறாள்.

பெண்ணைக் காவலர்களாக ஆக்கினாலும் படைத் தளபதிகளாக ஆக்கினாலும் முற்சுட்டிய இரண்டிலிருந்து மாற்ற முடியாது.

மேலும் அறிவியல் எல்லைமீறிச் செல்கிறது. பழம் நறுக்கும் அதே கத்தி கொலைக்கும் உதவுகிறது. இன்றைய அறிவியலும் ஓரெல்லையில் நிற்காமல் செல்கிறது.

**'நுனிக்கொம்பர் ஏறினார் அஃதிறந்து ஊக்கின்**
**உயிர்க்கிறுதி யாகி விடும்** (குறள். 476)

பழம் புராணங்கள், கதைகளில் உலகமே அழிந்து பிறகு உயிர்த்தெழுந்து வளர்ந்ததாக நாம் படிக்கும் கற்பனைகள் எல்லாம் காலம் காலமாகச் சொல்லிவந்த உண்மைகளும் அடங்கியனவாகும். இன்னும் ஒன்றிரண்டு நூற்றாண்டில் உலகம் பேரழிவைச் சந்திக்குமாயின் வியப்படைவதற்கு எதுவுமில்லை.

ஆயிரக் கணக்கான குழந்தைகள் பசிக்குப் பாலின்றி அழும்போது, 'டெஸ்ட் டியூப் பேபி' என்பது முக்கியமா?

பழங்காலச் சான்றோர்கள் மகளிர்க்கும் ஆடவர்க்கும் இயற்கை தந்துள்ள உடலமைப்பு, உள்ளத்துணர்வு ஆகிய இரண்டிற்கும் ஏற்பக் கடமைகளைப் பகுத்தனரோ? அல்லது இப் பகுப்பு இயற்கையாய் அமைந்ததோ தெரியவில்லை.

அமெரிக்க, ஐரோப்பிய நாடுகளில் குடும்ப வாழ்வும், பாலியல் உறவும் சிதைந்து, சீரழிந்து வருகின்றமையை, அங்குப் போய்ச் சில மாதங்களேனும் வாழ்ந்து பழகினால்தான் முழுமையாய்ப் புலனாகும்.

அங்குப் பெண் குழந்தைகள் பள்ளிகளிற் படும்பாடு பெரிது. வாழ்க்கையிலும் அவர்கள் படும் இன்னல்களுக்கு அளவில்லை.

பெண்களும் படித்து, கை நிறையச் சம்பாதித்துச் சுதந்திரமாக வாழ்கின்றனர் என்பது உண்மைதான். அதுவே

அவர்களுக்கு, தொல்காப்பியர் குறிப்பிடும் பன்னிரண்டு தீய குணங்களையும் தந்து, அவர்களை மன அமைதியற்றவர்களாக ஆக்கி விடவும் காரணமாகிறது.

இன்று அங்கு ஏற்பட்டுள்ள பொருளாதாரச் சரிவைப் பெரிதுபடுத்திப் பேசும் உலகம், கடந்த ஒரு நூற்றாண்டுக்கு மேலாக ஏற்பட்டுவரும் குடும்பக் கலாச்சாரச் சீரழிவைக் கண்டு கொள்வதில்லை. மேலும் அச் சீரழிவை நோக்கியே, நம்மை நம் ஊடகங்கள் அழைத்துச் செல்கின்றன. மக்களும் இன்று அவற்றையே விழைகின்றனர்.

அங்குள்ள ஆன்றோரும் சான்றோரும் இச் சீரழிவுகள் பற்றி வருந்தி, நூல்கள் எழுதுகின்றனர்; இருவரில் ஒருவர் வேலைக்குப் போனால் போதும் என்று இயக்கம் நடத்துகின்றனர்; குழந்தைகளை நேரடிப் பார்வையில் வளர்க்காமையால் வரும் தீமைகளை விளக்குகின்றனர். ஆனால், உலகிடை நல்லன எல்லாம் 'காட்டில் எறிந்த நிலவாகவே' போய்த் தொலைகின்றன.

முழுவதும் கெட்டழிந்த பிறகே ஞானம் பிறக்கும் போலும்!

## மனப் பொருத்தம்

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் மட்டுமல்லால் சங்கப் புலவர்களும் மிகவும் வற்புறுத்தியது 'மனப் பொருத்தம்' என்றே தோற்றுகிறது. சோதிடர் இதுபற்றிக் கூற வாய்ப்பில்லை. அவர் கோள்களின் நிலையை வைத்து, இவை இப்படியிருந்தால், மனப் பொருத்தம் அமையும் என்று குறி சொல்வார். தொல்காப்பியர் குறிப்பிடுவன பற்றிய எல்லாம், இம் 'மனப் பொருத்தம்' உண்டா எனப் பார்க்கும் காரணிகளே.

இம் மனப் பொருத்தம் ஒருவரை ஒருவர் முன்னதாக அறிந்து, இருவரது பழக்கவழக்க ஒற்றுமைகள் பற்றித் தெரிவதால் அமைவது. திருமணத்திற்கு முன்னதாக, இருவரும் பார்த்து, பழகி, ஒருவரை ஒருவர் புரிந்துகொள்ள வாய்ப்பில்லை. இன்று காதல் மணம் செய்து கொள்வோர்க்கு அவ் வாய்ப்பு உண்டு. எனினும் அவர்கள் எந்த அளவு, இளமை காரணமாகக்

காமநுகர்வில் ஈடுபடுகிறார்கள் என்பதும், எந்த அளவு தங்களுக்குள் உளதாகும் பொருத்தம் பற்றி ஆராய்ந்து தங்கள் பழக்கத்தைத் தொடரவோ, கைவிடவோ செய்கிறார்கள் என்பதும் ஐயத்திற்குரியனவாக உள்ளன.

பொருத்தம்பற்றி இவ்வளவு சொல்லும் தொல்லாசான் பொருத்தமுடைமை ஆராயப்படும்; பழகி அறியப்படும் என்று கூறாமல், அது 'முன்வினைப் பயனால்' அமைகிறது என்று களவியலில் கூறுகிறார்.

**'ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றி உயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப'** (தொல். 1036)

என்பதால், இது இறையருளால், 'பாலது' ஆணையால் நிகழ்வதென்பது சிந்தித்தற்குரியதாகும்.

## மனம் பொருந்திய குடும்பத்தில் நடந்த ஒரு 'மௌன' நாடகம்

ஆடவர்கள் குடும்பத்திற்கு வேண்டிய பொருள்தேடி வரவேண்டும். மகளிர் இல்லறம் பேணவேண்டும். அன்று உள் நாட்டில் வேளாண் தொழிலில் நன்கு வளர்ந்திருந்தனர். கடற்கரை ஓரமான ஊர்களில் உப்பு விளைவிக்கப்பட்டது. மருத நிலத்தில் நெல் முதலிய உணவு வகைகள் பயிரிடப் பட்டன. தமிழகத்தில் விளைவிக்கப்பட்ட கறி(மிளகு) யவனர்களால் இங்கு வந்து வாங்கிச் செல்லப்பட்டது. எகிப்திலிருந்து வந்து சந்தனக் கட்டைகள், மயில்தோகைகள் போல்வன வாங்கிச் செல்லப்பட்டன.

இங்ஙனம் உள்நாட்டு, வெளிநாட்டு வாணிகம் செழிப்புற்றிருந்ததைப் 'பட்டினப்பாலை' போலும் பாடல்களால் அறிகிறோம்.

பாலைத்திணைப் பாடல்கள் பெரும்பான்மை ஆடவர்கள் இன்றைய ஆந்திர இராயலசீமைப் பாலைப் பகுதியைக் கடந்து வடநாட்டிற்குச் சென்று வாணிகம் செய்து திரும்பியதைப் புனைகின்றன. இது பொருள்வயிற் பிரிவு எனப்படும். பிற பிரிவு பற்றியவை மிகக் குறைவாகவே கிடைத்துள்ளன.

அவன் பொருட்செல்வம் தேடிவரப் புறப்பட்டான். அதை அவளிடம் சொல்லவில்லை. ஆயினும் புறப்படுவதற்கு வேண்டியன செய்ததை, அவள் தனக்குள் உணர்ந்து கொண்டாள். அவளும், 'எங்களை விட்டுப் பிரியப் போகிறீரா?' என்று வாய்விட்டுக் கேட்கவில்லை.

திருமணமாகி நாளாகிவிட்டது. குழந்தை ஒன்றும் பிறந்து விட்டது. குடும்பம் பெரிதாகிக் கொண்டு வருவதால், கையில் காசின்றி எப்படி வாழ்வது? அவன் புறப்பட ஆயத்தமானான். இதனை முன் கூட்டிச் சொன்னால் மனைவி தாங்கமாட்டாள்; மற்றவர்களும் தடுக்கக் கூடும். இதனால் சொல்லாமலே அவன் புறப்பட, அவளும் பேசாமலே தன் வருத்தத்தைப் புலப்படுத்துகிறாள். பாலை பாடிய பெருங்கடுங்கோ, இக் காட்சியை - பேசாமலே நடந்த மவுன நாடகத்தைப் - படம் பிடிக்கிறார்.

அவளை எத்துணை அன்புடன் பேசி மகிழ்ச்சிப் படுத்த முயன்றாலும், அவள் முகம் வாடியே இருக்கிறது. கூப்பிட்டாலும் கேளாதவள்போல் இருக்கிறாள்.

அவளை அவன் கவனித்தபடி இருக்கிறான். அவள் தனியே, மெல்ல நடந்து, அவனிருக்குமிடம் நோக்கி வருகிறாள். அவளது அழகிய சிவந்த அடி, தரையில்பட்டுச் சுவடுபடுமாறு வருகின்றாள். அது அவளுடைய மனச் சுமையானது உடற் சுமையாகியதுபோல் தோற்றுகிறது. அவன் அருகே வந்து, வெறுமனே புன்னகைக்க முயல்கின்றாள். அதில் உணர்ச்சியில்லை; ஒளியுமில்லை. அவள் என்ன நினைக்கிறாள் என்று அவன் எண்ணிப் பார்க்கின்றான்.

அவள் என்ன நினைக்கக் கூடும் என்று, அவளைப் பார்த்து அவன் கற்பனை செய்கிறான். அவன் பொருள் தேடுவதற்காகத் தன்னைப் பிரியக் கூடாது என்பதே அவள் கருத்தாக இருக்கக் கூடும்.

அவன் பிரியக் கருதுகிற வழி, வற்றிய ஓமை மரங்கள் அடர்ந்த மேட்டுநிலக் காட்டுப் பகுதி. அங்கு நெல்லி மரங்கள் நிறைய உள்ளன. அவற்றின் உருண்டையான பளிங்குபோன்ற

காய்கள், உருண்ட வட்டுக் காய்கள்போல, பாதை எங்கும் பரந்து கிடக்கின்றன. கதிரவன் வெப்பம் தாக்குகிறது. வரிசையான கூரிய முனைகளையுடைய பரற்கற்கள், தீட்டப்பட்டதுபோன்ற முனைகளால், கால் விரலின் நுனியைக் குத்திச் சிதைக்கும். இப்படிப்பட்ட பரற்கற்கள் கிடக்கின்ற வேறு பசுமையே இல்லாத பயனற்ற பாலை நிலக் காட்டுவழி அது. அவ் வழியாகத் தன் கணவன் பிரிந்து செல்வதை அவள் மனம் ஒப்பவில்லை என்று தெரிகிறது.

"இத்தகைய காட்டுவழியில் செல்ல நினைத்தீராயின், முன்பு 'அன்புள்ள காதலர்கள் ஒருவரை ஒருவர் பிரிதல் அறநெறியன்று' என்று நீர் சொன்னது அங்ஙனம் சொன்ன அளவில் நின்று போகட்டும்" என்பதுபோல் அவள் தோற்றம் உளது.

இதனைக் குறிப்பால் காட்டி, முகத்தால் உணர்த்தி, ஓவியம் ஒன்று நிற்பதுபோல் அருகே வந்து நின்று தன் நினைவை மெய்ப்பாட்டால் புலப்படுத்துகிறாள்.

அவள் கண்களில் நீர் நிறைந்து, கருவிழிப் பாவையை மறைக்கிறது. தன் மார்போடு அணைத்திருந்த புதல்வனது புல்லிய தலையில் சூடிய, இணைப் பூக்களாகக் கட்டிய செழுங்கழுநீர்ப் பூக்களாலாகிய மலர்க் கண்ணிகளில் படுமாறு பெருமூச்சு விடுகிறாள். வெப்பம் மிக்க அம் மூச்சுக் காற்றுப் பட்டு, அம் மலர்கள் தங்கள் ஒளிமிக்க அழகு கெட்டு வாடின. இதனைப் பார்த்ததும் தலைவன் 'நான் இப்போது இவளைப் பிரியேன்' எனத் தனக்குள் முடிவு செய்கிறான். ஏனெனில் இவள், தான் அருகிலிருக்கும்போதே இப்படி வருந்துகிறவள், உடனே பிரிந்து சென்றால் பிழைக்கமாட்டாள் போல் இருக்கிறது என்பதாலேயாம்.

இதன் அடிக் குறிப்பு 'பொருள் வயிற் பிரியக் கருதிய தலைமகன் தன் நெஞ்சிற்குச் சொல்லிச் செலவழுங்கியது' என்பதாகும். அதாவது இவ்வளவும் அவளைப் பார்த்த அவனுடைய நினைவோட்டமாகப் படைக்கப் பட்டுள்ளது.

### அருகில் வந்தாள் பேசும் பொற்சித்திரம்

அளிநிலை பொறாஅது அமரிய முகத்தள்,
விளிநிலை கொள்ளாள், தமியள், மென்மெல,
நலம்மிகு சேவடி நிலம் வடுக் கொளாஅ,
குறுக வந்து, தன் கூர்எயிறு தோன்ற
வறிது அகத்து எழுந்த வாயல் முறுவலள்

அளிநிலை...முகத்தள் - 'அன்பு' காட்டியும் அவள் முகம் மாறியே உளது.

விளிநிலை...குறுக வந்து - கூப்பிட்டாலும் கேளாதுபோல் இருக்கிறாள். அவள் அருகே நடந்து வரும்போது, அவளுடைய மலர் போன்ற சிவந்த பாதங்கள் பட்டு மண்தரையில் காற்சுவடுபடுகிறது.

தன் கூர் எயிறு...முறுவலள் - கூர்மையான பல் வரிசை தெரியும்படி, உள்ளத்திலிருந்து வராத பொய்யான புன் சிரிப்புடன் காணப்படுகிறாள்.

### ஏதோ நினைக்கிறாள்

கண்ணியது உணரா அளவை, ஒண்ணுதல்
வினைதலைப் படுதல் செல்லா நினைவுடன்

கண்ணியது - நினைப்பது. அவன் பொருள்வயிற் பிரிதலை, வினை தலைப்படுதலை அவள் உடன்படாமல் ஏதோ நினைக்கிறாள்.

### கொடிய பாலைவழியில் போக நினைப்பதா?

முளிந்த ஓமை முதையலம் காட்டு,
பளிங்கத்து அன்ன பல்காய் நெல்லி
மோட்டிரும் பாறை ஈட்டு வட்டு ஏய்ப்ப
உதிர்வன படூஉம் கதிர்தெறு கவாஅன்,
மாய்த்த போல மழுகு நுனை தோற்றி
பாத்தி அன்ன குடுமிக் கூர்ங்கல்
விரல்நுதி சிதைக்கும் நிரைநிலை அதர
பரல் முரம்பு ஆகிய பயமில் கானம்
இறப்ப எண்ணுதி ராயின்.

முளிந்த ஓமை - காய்ந்த ஓமை மரங்கள். மிகப் பழைமையான காடு, பளிங்குபோல் உருண்டையான நெல்லிக்காய்கள், வட்டுக் காய்கள் போல் சிதறிக் கிடக்கின்றன. அவற்றை நகர்த்தி வட்டாடுதல் ஒரு விளையாட்டு. இன்றைய சதுரங்க(chess) விளையாட்டுப் போன்றது அது. ஞாயிற்றின் வெப்பம் கூடுதல். பரற் கற்கள் தீட்டப்பட்டதுபோன்ற கூர்மையான முனையுடன், போவாரது கால் விரல் நுனியைச் சிதைக்கும். பயனற்ற மேட்டு நிலமாகிய வழிகள். அவ் வழியில் இறப்ப - கடந்து செல்ல நினைக்கின்றமை பொருத்தமுடையதன்று.

## பிரியேன் என்ற உறுதிமொழி

..............................அறத்தாறு
அன்றுஎன மொழிந்த தொன்றுபடு கிளவி
அன்ன ஆக என்னுநள் போல

காதலர்களைப் பிரிதல் அறமன்று என்று முன்பு கூறிய உறுதிமொழி, அப் பேச்சுடன் நின்று போகட்டும். அதை இன்று மறந்துவிட்டீர் என்று சொல்பவள் போல நிற்கிறாள். பேசவில்லை, முகம் சொல்கிறது.

## ஓவியம்போல் நின்று உள்ளக் கருத்தை உணர்த்துகிறாள்

முன்னம் காட்டி, முகத்தின் உரையா
ஓவச் செய்தியின் ஒன்று நினைந்து ஒற்றி
பாவை மாய்த்த பனிநீர் நோக்கமொடு
ஆகத்து ஒடுக்கிய புதல்வன் புன்தலைத்
தூநீர் பயந்த துணைஅமை பிணையல்
மோயினள் உயிர்த்த காலை, மாமலர்
மணிஉரு இழந்த அணிஅழி தோற்றம்

முன்னம் - சைகை. முகத்தின் உரையா - வாய்பேசாமல், முகத்தினால் உணர்த்தினாள். ஓவியம்போல் நின்று பிரிவை விரும்பாத அதை நினைந்து கண்ணீர் விடவே, அது கருவிழிப் பாவையை மறைத்து, வெளிப்படுகிறது. மார்புடன் அணைத்த மகனின் தலையிற் சூடிய பூங்கண்ணியில் அவள் முகம் சாய்த்துப் பெருமூச்சு விட்டதும் அதன் வெப்பம் தாங்காமல் மலர்கள் வாடி, அழகு கெட்டு ஒளி மங்கின.

## பிரிவைத் தவிர்த்த பெருந்தன்மை

கண்டே கடிந்தனம், செலவே - ஒண்தொடி
உழையம் ஆகவும் இனைவோள்
பிழையலள் மாதோ பிரிதும்நாம் எனினே (அகம். 5)

பக்கத்தில் இருக்கவும் இப்படி வாடுகிறாள்; பிரிந்தால் பிழைக்கமாட்டாள் போலும். அவளின் சித்திரப் பாவை போன்ற தோற்றத்தைக் கண்டே அவன் பிரிவைத் தவிர்த்தனன். (செலவு - பிரிந்து செல்லுதல்)

அன்புள்ள காதலரின் குடும்ப வாழ்வை, பிரிவு வரும்போது வெளிப்படும் அன்பால் புலப்படுத்துவது இது. அன்றைய பொருள்வயிற் பிரிவு என்பது, இன்றைய ஆந்திர நாட்டைக் கடந்து, வடநாடு சென்று வாணிகம் செய்து திரும்புவதாகும். 'ஊருக்குப் போனவன் செய்தி சாமிக்குத் தெரியும்' என்று ஒரு பழமொழி கேள்விப்படுகிறோம். அதுபோல இவ்வாறு இடைப்பட்ட ஆந்திரப் பாலை நிலம் கடந்து வண்டி, குதிரை, தேர் போன்ற வாகனங்களில் சென்றவர்கள் தங்கள் மனைவி, மக்களுடன் தொடர்பு கொள்ளுதல் அரிது. பறவை முதலியவற்றைத் தூது அனுப்ப முயன்றிருக்கலாம். முன்பே சென்று திரும்பி வருபவரிடம் சொல்லி அனுப்பலாம். எதுவும் தெரியாமல் காலம் கடத்தலால், இப் பிரிவு மிகுதியும் கவலை அளிப்பதானது. மக்கள் வாழ்வைப் பற்றிய இலக்கியமும் பிரிவு பற்றியே பெரிதும் பேசுகிறது.

இப் பாடல்கள் பற்றி அறிஞர் மு. வ. அவர்கள் 'ஔவச் செய்தி' என்ற தமது நூலில் விரிவாக எழுதியுள்ளார். தமிழர்கள் மிகுந்த முயற்சியுடையவர்களாக இருந்தார்கள். அவர்கள் தம் முன்னோர் தேடிவைத்த செல்வத்தை நம்பி, அதனை வைத்து உண்டு, உறங்கி வாழ்தலை வெறுத்தார்கள். 'உள்ளது சிதைப்போர் உளரெனப் படாஅர்' என்பது அவர்கள் கருத்து. 'வினையே ஆடவர்க்கு உயிர்' என்று உழைப்பின்மீது நம்பிக்கை வைத்து, தன் முயற்சியுடன் வாழ்ந்தார்கள்.

அவர்களின் காதல் வாழ்வு குடும்ப அமைப்பு முதலியவற்றில் பரத்தமை போலும் குறைகளிலிருந்தாலும், அவர்களின் பண்பாடு பற்றிய சிந்தனை அழிந்துவிடவில்லை.

குடிக்கின்ற பழக்கமிருந்தாலும் குடிப்பது தவறு என வெட்கப்படும் நிலை இருந்தது.

திருமணப் பொருத்தம்பற்றித் தொல்காப்பியரைச் சிந்திக்க வைக்குமளவு, அவர்களின் வாழ்வு சிறப்புற்றிருந்தது.

தொல்காப்பியர் அற்றைத் தமிழரின் நிறைகளை மட்டுமன்றி, குறைகளையும் நாம் உணருமாறு கூறிச் சென்றுள்ளார். சங்கப் புலவர்களும் ஒளிவு மறைவு இன்றி நிறை, குறை இரண்டையும் பாடி உள்ளனர். ஒரு முக்கிய குறிப்பு எதுவென்றால் குறைகளைக் குறை என உணருமாறு அவை பாடப்பட்டுள்ளன. தீமைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்ற உள்ளுணர்வை, சங்கப் பாடல்கள் தருகின்றன.

இன்றுபோல், அன்றும் இக் காதல் உறவில் விரிசல்கள் ஏற்பட்டுள்ளன. ஆடவன் காதலித்துவிட்டுப் பின்பு கைவிடுதல், பெண்ணின் வாழ்வில் பேரவலத்தை விளைவிக்கிறது. இதனால் பாதிக்கப்படுபவள் பெண்ணே. பொருத்தம் பார்க்கவேண்டியவள் அவளே என்பதுபோலப் பேராசிரியர் விளக்கம் தந்திருப்பது சிந்தனையைத் தூண்டுகிறது. பெண் எளிதில் இரையாகிவிடக் கூடாது. முன்பு ஆண்களிடம் இருந்த அளவு, பெண்களிடம் மன ஊசலாட்டம் இருந்ததில்லை. இன்று பெண்களிடமும் 'சலனப் புத்தி' பெருகிவிட்டது. சுற்றுப் புறச் சூழல் மாசுபடுகிறது என்று புறச் சூழல் பற்றிப் பலரும் பேசுகின்றனர். அதைப் போன்ற தீய சூழலை ஊடகங்களும் தீயவர்களும் உண்டாக்கி மாசுபடுத்துவதால், மக்களின் 'அகச் சூழல்' கெடுவதை யாரும் எடுத்துரைப்பதில்லை.

பாலுணர்வு என்பது பஞ்சும் நெருப்பும் போல எளிதில் பற்றிக் கொள்வது. எவ்வளவு பெரியவரும், எதிர்பாராத நிலையில் சிலபோது தடுமாறிவிட நேரும்.

காம உணர்வு பசி போன்றது. வயிற்றுப் பசி, உடற்பசி, உயிர்ப்பசி என்பர். வறுமையால் ஏற்படும் வயிற்றுப்பசி கொடியது. உயிர்ப்பசி என்பது, தான் பிறரால் பாராட்டப்படும் அளவு உயரவேண்டும் என்ற வேட்கையை விளைவிப்பது. உடற்பசி பாலுறவை நாடுவது. இதில் சில வரன்முறைகள் வேண்டும். திருமணம் செய்யுமுன் நூறுமுறை யோசிக்கவேண்டும்.

நாடாது நட்டலிற் கேடில்லை, நட்டபின்
வீடில்லை நட்பாள் பவர்க்கு (குறள். 791)

என்பது, காதலுக்கும் பொருந்தும்.

'ஆசை அறுபது நாள், மோகம் முப்பதுநாள்' என்பர். இதில் மிகுந்த தயக்கமும் எச்சரிக்கையும் வேண்டும்.

இளைஞர்க்கு இதுபற்றிக் கற்பிக்க வேண்டும். சிலர் இதை எப்படிக் கற்பிப்பது என வெட்கப்படுவர். அது தவறு. திருமணம் ஆயிரங்காலத்துப் பயிர் என்பர்.

காதலன் முதலில் மிகுந்த அன்புடையவனாக இருந்தான். பிறகு பிரிந்து, ஏமாற்றத்தை விளைவித்தான். இதனால் பாதிக்கப்பட்ட தலைவி, அவனைப் பற்றி, வெறுப்புடன் பேசுகிறாள்.

முதலில் இவள் கையைக் கொண்டு, அவன் தன் கண்களில் ஒற்றிக் கொண்டானாம். தன் கையால் இவள் நெற்றியைத் தடவிக் கொடுத்தானாம். தாய் போல இனிமையாகப் பேசினானாம். இறுதியில் கள்வன் போலக் கொடுமையாக நடந்து கொண்டானாம்.

என்கைக் கொண்டு தன்கண் ஒற்றியும்
தன்கைக் கொண்டுஎன் நன்னுதல் நீவியும்
அன்னை போல இனிய கூறியும்.
கள்வர் போலக் கொடியன் மாதோ (நற். 28)

அன்றும் இன்றும் இதுபோன்ற காட்சிகள் நிரம்பவுள்ளன.

மற்றொரு பெண் தன் காதலன் திருமணம் முடிக்க விரைவில் வருவதாய்ச் சொல்லிப் போனவன், எங்குள்ளான் என்றே தெரியவில்லை. அவள் மேலே வானில் தோன்றும் முழுமதியைப் பார்த்து, 'உனக்கு நிச்சயம் தெரியும். எனவே அவனிருக்குமிடத்தை எனக்குக் காட்டு' என வினவுகிறாள். சற்றுப் பொறுத்து, பித்துப் பிடித்தவள்போல் 'நீ எங்கே காட்டப் போகிறாய்' அறிந்திருந்தும் சான்று சொல்லாமல் இருக்கும் மதியே, அதனால்தான் என் தோள் மெலிவது போல் நீயும் சிறிது சிறிதாகத் தேய்ந்து ஒழிகின்றாய்.' இவ்வாறு சீற்றத்தோடு பேசுகிறாள்.

பளிங்கு செறிந்தன்ன பல்கதிர் இடையிடைப்
பால்முகந் தன்ன பசுவெண் ணிலவின்
மால்புஇடர் அறியா நிறையுறு மதியம்
சால்பும் செம்மையும் உடையை ஆதலின்
நிற்கரந்து உறையும் உலகம் இன்மையின்
எற்கரந்து உறைவோர் உள்வழி காட்டாய்
நற்கவின் இழந்தஎன் தோள்போற் சாஅய்ச்
சிறுகுபு சிறுகுபு செரீஇ
அறிகரி பொய்த்தலின் ஆகுமோ அதுவே (நற். 196)

முழுமதியின் ஒளிக் கதிர்கள் உலகெலாம் பரவும் அல்லவா? அதற்கு, ஒளிந்திருக்கும் அவன் இருக்குமிடம் தெரியுந்தானே? அதனால் எற்கரந்து - எமக்குத் தெரியாமல் ஒளிந்திருப்பவனைக் காட்டுவாயாக. இவ்வாறு தலைவி கேட்கிறாள். அறிகரி - எல்லாவற்றையும் பார்க்கும் மதி சான்றாகுமாம். அறிகரி பொய்த்தலின் - தான் அறிந்ததைச் சொல்லாமல் பொய்த்தலினால்.

நிலவு எங்கே காட்டப்போகிறது? அது காட்டாது என்ற உள்ளுணர்வு காரணமாக, அதன்மீது சீற்றம் கொள்கிறாள். இவ்வாறு நிலவைப் பாத்துப் பேசுமளவு அவள் நெஞ்சம் நொந்துபோயுள்ளது.

சங்கப் பாடல்களில் இவ்வாறு ஒளிவு மறைவு இன்றிப் பல நடைமுறைச் செய்திகள் கூறப்படுகின்றன. பல பாடல்கள் ‘இருதலைப் புள்ளின் ஒருயிரன்ன’ நல்ல காதலர்களைப் பற்றியே புனைகின்றன.

சங்க காலத்தில் ‘வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்’ என்பது ஒரு கூற்றுக்கான சூழ்நிலை. காதலித்துப் பழகியபின், தலைமகன் தன் முயற்சியால் பொருள்தேடி வந்து மணப்பதென்பது இதன் அடிக்கருத்தாகும். இதிலிருந்து அன்று இளைஞர்கள் தன் முயற்சியால் தாமே பொருளீட்டிப் பெண்ணுக்குப் பரிசம் போட்டுத் திருமணம் செய்துகொள்ளும் பழக்கம் இருந்தமை புலனாகும்.

பெற்றோரும் உற்றாரும் பொருத்தம் முதலியன பார்த்துத் தம் பிள்ளைகளுக்குத் திருமணம் செய்துவைக்கும் பழக்கம் இல்லையா என்ற ஐயம் எழும். அன்றைய சமுதாயத்தில்,

பெற்றோர் பார்த்துச் செய்விக்கும் திருமணங்களே, இன்றுபோல் அன்றும் இருந்தன என்பதற்குப் பல குறிப்புக்கள் உள.

குறிஞ்சிப்பாட்டில்,

**கொடுப்பின் நன்குஉடைமையும் குடிநிரல் உடைமையும்**
**வண்ணமும் துணையும் பொரீஇ எண்ணாது**
**எமியேம் துணிந்த ஏமம்சால் அருவினை**

என்று தோழி கூறுவதாகக் கபிலர் பாடியுள்ளார். மணமகனது குடி தங்குடிக்குச் சமமானதா என்று பார்த்துள்ளார்கள். இன்றும் பெண்வீட்டார், தம் மகளைக் கொடுக்கும் குடி, சமுதாய மதிப்பில் தமக்கு நிகரானதுதானா என்பதைக் கருதுகின்றனர் அல்லவா?

பெண்ணைக் கொடுத்தால், அவள் வாழ்வு நன்கு அமையுமா என்பதைச் சிந்திப்பார்கள். தோற்றமும், பிற்காலத்துத் துணையாகும் உறவுச் சூழலும் பற்றி எண்ணிப் பார்ப்பார்கள். அவ்வாறு பொருத்தமெல்லாம் பாராது, தாங்களே முடிவு செய்தது இது என்று கூறுகிறாள் தோழி. இதனால், இன்றுபோல் அன்றும் பெற்றோர் பார்த்துச் செய்துவைத்த திருமணங்களே மிகுதி என உணர வாய்ப்புள்ளது. ஆனால் அது இலக்கியத்தில் சுவைதரும் பொருளாகவில்லை. அதனால் காதல் மணங்கள் பற்றியே இலக்கியம் படைத்துள்ளனர்.

தலைமகன் பொருள்தேடிவந்து மணப்பதாகக் கூறிப் பிரிந்து சென்றவன், சொன்ன சொற்படி உரிய நாளில் திரும்பிவந்து, திருமண ஏற்பாட்டைத் தொடங்கினான். இதைப் பார்த்த தோழி, தாங்கள் அடைந்த எல்லையற்ற மகிழ்ச்சியைக் கூறுகிறாள்.

மழையால் பிச்சிப் பூக்கள் அளவின்றிப் பூத்துக் குலுங்குகின்றன. அவற்றைக் கொய்து முடிப்பது இயலாததானது. அம் மலர்களுள் மணம் பொருந்திய ஓர் அரும்பின் அடியிலுள்ள செந்நிறம்போல், செவ்வரி ஓடிய கண்களையுடைய அழகான தலைவி. அவள் மேனி தளிர்போன்றது. இத்தகைய தலைவியைத் தோழி கூப்பிட்டு தலைவன் திருமணத்திற்கான ஆயத்தங்கள் செய்யத் தொடங்கிவிட்டதை அறிவிக்கின்றாள். அதனால் தனக்கேற்பட்ட மகிழ்ச்சிப் பெருவெள்ளத்தைச் சொல்கிறாள்.

கோடை காலத்தில், மழையே இல்லாமல், நாடு வறண்டு போனது; கலப்பைகள் மூலையில் தூங்கின. திடீரென்று ஓர் இரவில் பெருமழை பெய்தது. குன்று போலக் கரையுடையனவும் நீரின்மையால் பறவைகள் வந்து தங்காதனவும் வெப்பம் மிக்கனவுமான குளங்கள் எல்லாம் நிறையும்படி மழை கொட்டியது. அன்று காலையில் ஊர் மக்களெல்லாம் பெருமகிழ்ச்சியடைந்தனர்.

இதனைச் சொல்லிவிட்டு, "அன்று பலரும் அடைந்த மகிழ்ச்சியனைத்தையும், என் உள்ளத்தினுள் ஒருசேரக் கொண்டுவந்து கொட்டினாற்போல, என் மகிழ்ச்சி எல்லை கடந்தது" என்றாள் தோழி தலைவியிடம்.

மகிழ்ச்சியை அளக்க முடியுமா? கபிலர் அதனை இவ்வாறு அளக்கலாம் எனக் காட்டுவதுபோல் இது உளது.

மலிபெயற் கலித்த மாரிப் பித்திகத்துக்
கொயல்அரு நிலைஇய பெயலேர் மணமுகைச்
செவ்வெரிந் உறழும் கொழுங்கடை மழைக்கண்
தளிரேர் மேனி மாஅ யோயே
நாடுவறங்கூர நாஞ்சில் துஞ்சக்
கோடை நீடிய பைதறு காலைக்
குன்று கண்டன்ன கோட்ட, யாவையும்
சென்றுசேக் கல்லாப் புள்ள, உள்ளில்
என்றூழ் வியன்குளம் நிறைய வீசிப்
பெரும்பெயல் பொழிந்த ஏம வைகறைப்
பல்லோர் உவந்த உவகை எல்லாம்
என்னுள் பெய்தந்தற்றே, சேணிடை
ஓங்கித் தோன்றும் உயர்வரை
வான்தோய் வெற்பன் வந்தமாறே (அகம். 42)

மாரிப் பித்திகம் - மழைக்காலத்துப் பிச்சிப்பூ. செவ்வெரிந் - பூவின் சிவந்த அடிப்பாகம். செவ்வரி ஓடிய கண்ணுக்கு உவமை. நாஞ்சில் - கலப்பை. குளத்திற்குக் குன்றுகண்டாற் போன்ற கரை. சேக்கல்லாப் புள் - பறவைகள் தங்கவில்லை. என்றூழ் - வெப்பம். குளம் வறண்டு, உள்ளே நீர்ப்பசையே இன்றிக் கிடக்கும் காட்சி. இக் கோடை கால வெப்பம் நீங்கப் பெய்த மழையால் மகிழ்ச்சி

பொங்கியது. இப் பாடலின் சிறப்பு, அவ்வாறு ஊரார் பலரும் அடைந்த மகிழ்ச்சி வெள்ளம் எல்லாவற்றையும் கொண்டுவந்து, தோழியின் உள்ளத்திற் கொட்டியதுபோல, அவள் மகிழ்ச்சி அடைந்தாள் என்பதுதான்.

**பல்லோர் உவந்த உவகை எல்லாம்**
**என்னுள் பெயதந் தற்றே**

சங்கப் பாடல்களின் செழுமையையும் சிறப்பையும் நினைக்குந்தோறும் நம் உள்ளம் தோழி சொல்வது போல மகிழ்ச்சியால் நிறைகிறது.

❄ ❄ ❄

# குறிப்புகள்

மூதறிஞர் தமிழண்ணல் நூலறி புலமையும் நுண்ணிய நோக்கும் உடையவர். ஆன்றவிந்தடங்கிய கொள்கைச் சான்றோர். பாரெல்லாம் தமிழ்மணம் பரப்பும் பண்பாட்டுப் பெட்டகம். அவர் எழுதியுள்ள இந் நூல் தொல்காப்பியத்தைப்பற்றியும் பண்டைத் தமிழருடைய உயர்வான வாழ்வைப்பற்றியும் இன்றைய தமிழரின் இரங்கத்தக்க நிலையைப்பற்றியும் அறியத் துணைசெய்ய வல்லது. தமிழ்த்திருமணம் இதுவெனக் காட்டி, அவர் இந் நூலில் வரையறை செய்துள்ளார்.

- முனைவர் **தா. இரா. பச்சமுத்து**
வேந்தர், SRM பல்கலைக்கழகம்.

பழைமைக்கும் பழைமையாய்ப் புதுமைக்குப் புதுமையாய் விளங்குகின்ற தொல்காப்பியம் தமிழரின் பெருமையை உணர்த்தும் உரைகல்லாகும். இத்தகைய சிறப்புவாய்ந்த தொல்காப்பியம் விளக்கும் திருமணப் பொருத்தம் குறித்து, பேராசிரியர் தமிழண்ணல் அவர்கள் நுட்பமாகவும் ஆழமாகவும் அகலமாகவும் இந் நூலில் ஆய்வு செய்துள்ளார். காதலன் பெருமையும் அறிவுத் திறனும் நெஞ்சுரமும் உடையவனாகவும் காதலி அஞ்ச வேண்டியவற்றிற்கு அஞ்சி, நாணம் இளமைப் பண்புகளுக்கேற்ற மடப்பம் முதலியன உடையவளாகவும் விளங்குவர் என்னும் தொல்காப்பியக் கருத்தை இந் நூலில் சிறப்பாக விளக்கியுள்ளார். தொல்காப்பியர் கூறும், காதலரிடம் அமையவேண்டிய பத்துப் பொருத்தங்களை எளிய நடையில் அனைவருக்கும் விளங்கும் வகையில் விளக்கமாகக் கூறியுள்ளார்.

- முனைவர் **மு. பொன்னவைக்கோ**
துணைவேந்தர், SRM பல்கலைக்கழகம்.

ISBN 978-81-924445-2-9
9 788192 444529 >
₹ 45/-

தமிழ்ப்பேராயம்
Thamizh Academy